ஹிந்து தர்மம்

மலர்.1 டிசம்பர்-ஜனவரி. 1936.

இதழ்.6,7

JL
O2m211,N35
N35-N6-7
1C2216




ॐ

BEST

**TAILORING**

CHEAP
NEAT
STYLISH
CUTTING
AND
DESIGNS

**Quick Delivery.**

PROMPT EXECUTION.

TRY ONCE!

AT

K. SHIVAJI RAO

AND SON

'GENTS' TAILOR

359, RASAPPA CHETTY ST., P. T., MADRAS.

# இது ஓர் நல்ல தருணம்!



1. சங்கீத அறிஞர்களால் சங்கீதக் கருவிகள் செய்யப்படுகின்றன.
2. உயர்ந்த சாமான்களும் நீண்ட கால உத்திரவாதத்துடனும் செய்தளிக்கப்படும்.
3. சுத்த ஸ்வரங்கள் அமைத்தளிக்கப்படும்.
4. சங்கீத வாத்யங்களில் 15 வருடங்கள் அனுபவமுள்ளவரும், அமெரிக்கா ஆகிய மேல் நாடுகளுக்கு 22 கருவிகளைச் செய்தனுப்பி க்யாதிபெற்றவருமாகிய ப்ரொபஸர் ஆர். எஸ். மனி (R.S. Money) அவர்களால் எங்கள் கம்பெனி கருவிகள் பரிசீலனை செய்தளிக்கப்படும்.



எல்லா சங்கீத கருவிகளும் தயாராயிருக்கின்றன.

## MUSICAL EMPORIUM

"ஷாஜி மஹால்"

537, திருவல்லிக்கேணி, :: :: மதருஸ்.



ௐ

# ராஜா பிள்ளை & சன்ஸ்

## நாகரீகர்களின் உடைகளைத் தயாரிப்பதில் திறமை வாய்ந்தவர்கள்.

## சமாஜ உடைகளில் தனிப்பெருமை யடைந்தவர்கள்.

3-141 மவுண்ட் ரோட், கதீட்ரல் போஸ்ட்,

ஆயிரம் விளக்கு. மதருஸ்.




# "ஹிந்து தர்மம்"

## சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற் கூலி யுள்பட | இந்தியா, பர்மா, ஸிலோன் .... | ரூ. 1-0-0 |
| | பினாங்கு, சிங்கபூர், தென் ஆபிரிகா, பஸரா, பாக்டாட், மெஸபொடோமியா, முதலிய வெளிநாடுகளுக்கு | 2-0-0 |

நடந்துக் கொண்டிருக்கிற மாதத்திய தனிச்சஞ்சிகை விலை. 0-1-3

(1) சந்தாதாரராய் சேருகிறவர்கள் பூர்ணமாகப் பெயரையும், விலாசத்தையும் எழுதியனுப்ப வேண்டும்

(2) சந்தாத்தொகையை முன்னுடியே செலுத்தியாவது அல்லது, வி. பி.யில் பணம் கட்டியாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும். எப்போது சேர்ந்தாலும் அவ்வருட இதழ் முதலிலிருந்து கணக்கு வைக்கப்பட்டு, இதழ் முதற்கொண்டு அனுப்பப்படும்

(3) சஞ்சிகையை வி. பி. யில் வரவழைப்போருக்கு ரிஜிஸ்டர் சார்ஜ் 3 அணாவோடு, மணியார்டர் கமிஷன் 2 அணா வி. பி. தபால் சார்ஜ் 6 பை. ஆக 0-5-6 அதாவது. 6 அணா சேர்த்து ஆக மொத்தம் 1-6-0 ஆகும். ஆதலால் முன்னுடி மணியார்டர் 1-2-0 அனுப்பிப்பத்திரிகைப் பெற்றுக்கொள்வதே நலம். இதைக் கவனிக்கவும்.

(4) யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் அவர்கள் 15 நாள் வரையில் பார்த்து அதற்குமேல் அவ்விவரத்தைத் தெரிவித்தால் மறுபடியும் சஞ்சிகை யனுப்பக்கூடும், பிறகு தெரிவிப்போர் கிரய மனுப்பி பெறவேண்டும்.

(5) விலாசம் மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புது விலாஸத்திற்குச் சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துக் கொண்டு எங்களுக்கு புது விலாஸத்தை யறிவிக்க வேண்டும். இன்றேல் அடுத்த சஞ்சிகை பெரும்பாலும் பழைய விலாசத்திற்கே போய்விடும். அதற்கு நாங்கள் பொருப்பாளிகளல்ல.

(6) சந்தா நம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப் படமாட்டா. அத்தகைய கடிதங்களால் நேரிடும் தவறுதல்களுக்கு நாங்கள் பொருப்பாளிகளல்ல. பதிலை விரும்புவோர் ரிப்ளை கார்டாவது அனுப்பினால் அன்றி விடையளிக்கப் படமாட்டா

## பொருளடக்கம்.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | வேத வியாக்கியானம் | .... 185 |
| 2. | கர்ம சித்தாந்தமும் புனர் ஜென்மமும் | .... 188 |
| 3. | வர்ண வியவஸ்தாவில் மகாத்மா | ... 197 |
| 4. | வினாவிடை | .... 200 |
| 5. | இந்து வேதம் | ... 212 |
| 6. | ஸ்ரீஸ்வாமி சத்யதேவரின் உபதேசம் | .. 215 |
| 7. | உண்மைச் சம்பவக் கதை | ... 216 |
| 8. | ஆரிய உலகம் | .... 220 |
| 9. | தென்னமெரிக்காவில் சமாஜப் பிரசாரம் | ... 222 |
| 10. | உருவ வழிபாட்டுக் கொடுமை | ... 225 |


### ஆசிரியரின் வேண்டுகோள்.

இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் வசிக்கும் ஹிந்து மதாபிமானிகளையும், தேசாபிமானிகளையும் முக்கியமாய் தமிழ்அபிமானிகளையும், "ஹிந்து தர்மம்" என்கிற நமது பத்திரிகைக்கு விஷயதானம், எழுதி அனுப்பும்படியாய் கேட்டுக்கொள்ளுகிறோம். விஷயதானம் விஷயங்களை வளர்த்தாமல் சுருக்கமாகவும், தர்மத்திற்கு முரண் ஆகாத தன்மையிலுமிருக்கவேண்டும். வெளிநாடுகளில் உள்ளோர் மதசம்பந்தமாக நேரும் அநுபவங்களையும், அந்நியமத ஆராய்ச்சியினால் உண்டான அநுபவங்களையும் எல்லோருக்கும் முக்கியமாக ஹிந்துக்களுக்கு ஓர் உணர்வை ஊட்டும்படி இருத்தல் வேண்டும்.

"ஹிந்து தர்மத்தின்" ஆசிரியர் மேல்கண்டவாறு விஷயதானம் செய்பவர்கள் வியாசம், கடிதம் முதலியன எழுதுவோர்களுடைய அபிப்பிராயங்களுக்கு எவ்விதத்திலும் உத்திரவாதியாகமாட்டார்.

பிரிட்டிஷ் காலனிகளிலும், மற்றைய வெளிநாடுகளிலும் உள்ள இந்தியர்கள் ஜீவிக்கும் தன்மை முதலியவைகளை புகைப்படம் எடுத்து நமக்கு அனுப்புவதோடு சுருக்கமான விவரங்களும் கொடுத்தனுப்பவேண்டும். அவைகளை மிக வந்தனத்துடன் பெற்று, அவைகளை பிரசுரிக்கும்படி ஏற்பாடுசெய்வதுடன் அவைகளுக்கு கிரயமும் அளிக்கத்தயாராக விருப்பதை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

E. S. R.



# ஹிந்து தர்மம்

## ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை

"The Vedic religion was the only one, the development of which took place without any extraneous influences, while, even in the religion of the Hebrews, Babylonian, Phonician and at a later time Persian influences, have been discovered."

Professor MAX MULLER, in his "India what can it teach us?" P. 129.

"நஹி ஸத்யாத்பரோ தர்ம:"

*"சத்தியத்தைப் பார்க்கிலும் மேலான தர்ம மொன்றில்லை"*


ஏ. எஸ். ரங்கசுவாமி—ஆசிரியர்.

| மலர் 1 | யுவ ௵—கார்த்திகை-மார்கழி௴ டிசம்பர்—ஜனவரி—1936௵ | இதழ் 6 & 7 |
|---|---|---|


## வேத வியாக்யானம்

ஓம் சோதயித்ரீ ஸூன்ருதானாம் சேதன்தீ ஸுமதீனாம் ।
யஜ்ஞம் ததே ஸரஸ்வதீ ॥ ருக்-1-3-11.

### பதவுரை

(ஸூன்ருதானாம்) சத்தியமும் பிரியமும் பொருந்திய வாக்கை (சோதயித்ரீ) பிரயோகித்துக்கொண்டும் (ஸுமதீனாம்) நல்ல அறிவை (சேதன்தீ) அறிவித்துக்கொண்டும் (ஸரஸ்வதீ) சரஸ்வதீ (யஜ்ஞம்) வேள்வியை (ததே) தரித்துக் கொண்டிருக்கிறாள்.

## வியாக்யானம்

சரஸ்வதி யென்றால் நல்வாக்கு என்றும், நல்லறிவு என்றும் பொருள்.

மனித வாழ்க்கை ஓர் வேள்வியாகும். இவ் வேள்வியை அநேக தேவர்கள் நடத்தி வைக்கின்றனர். அவர்களுள் சரஸ்வதியும் ஒருவராவர். இவ் வாழ்க்கைவேள்வியில் சரஸ்வதி இரண்டு காரியங்களைச் செய்கின்றாள். அதாவது நல்வாக்கையும், நல்லறிவையும் பிரேரேபிப்பதாகும். சாதாரண வாக்குக்கும் ஸ்ரீ சரஸ்வதியால் அளிக்கப்பட்ட வாக்கிற்கு முள்ள வித்யாசத்தை ஆராய்வோம். சரஸ்வதி யென்ற வாக்கு உண்மை, அன்பு கொண்டொளிர்வதாகும்.

சத்யம் ப்ரூயாத் ப்ரியம் ப்ரூயாத்
ந ப்ரூயாத் சத்ய மப்ரியம்—

என்றால் சதா உண்மையே பேசவேண்டும், அவ்வுண்மையையும் அன்புடனே பேசவேண்டும். இதனையே தமிழிலும்:—"இன்சொலால் ஈரம் இருநீர் வியனுலகம் வன்சொலாலென்றும் மகிழாதே" என்று சொல்லியிருக்கிறது. இம்மூது மொழிகளுக்கிணங்க சத்தியமும் அன்புமாகப் பேசப்படும் வாக்கின் பெயர் சரஸ்வதி யாகும்.

பொதுப்படையாக அறிவு என்று நாம் குறிப்பதற்கும் சரஸ்வதி யென்பதற்கு முள்ள பேதத்தைக் காண்போம். வாழ்க்கையில் நல்லன, தீயன ஆகிய இருவகைக் காரியங்களைப் புரியத் தூண்டுவது அறிவே. துஷ்டர்கள் தங்கள் துஷ்டக் காரியங்களையும் அறிவின் துணைகொண்டே புரிகின்றனர். ஆனால் இப்படித் துஷ்ட காரியங்களில் சென்று கொண்டிருக்கும் அறிவு சரஸ்வதியாகாது. ஆனால் (சுமதி) நல்லறிவின் பெயரே சரஸ்வதி யாகும். நல்லறிவின் லக்ஷணத்தை கீதையில்

ஞானாக்னி: ஸர்வ கர்மாணி பஸ்மஸாத் குருதேயதா। (கீதை)

எனில் ஞானம் (நல்லறிவு-சுமதி) என்பது சர்வ தீய காரியங்களையும், நேரிய பொதுவாக எல்லாக் கர்மங்களையுமே நீறாக்கிவிடுகிறது.

என்றால் எந்த அறிவானது மனிதர்களுக்கு உலகிலே பந்தமற்ற மோக்ஷ சாதன கர்மங்களைப் புரியத் துணை புரியுமோ அந்த அறிவின் பெயரே சரஸ்வதி யெனப்படும்.



இப்போது மந்திரத்தின் கருத்தை ஆராய்வோம்:—எல்லா மனிதர்களும் தங்கள் வாழ்க்கையில் சரஸ்வதியை துணை கொள்ளட்டும். எம் மனிதனாவது பொய் பேசினால் அவன் சரஸ்வதி தேவியைப் பெற்றிலன் என்றறியலாம். மற்றொருவர் பேசுவது உண்மையாயினும் கடூரமாகப் பேசுபவரும் சரஸ்வதியின் அருளைப் பெறாதவராகும். இவ்விரண்டையும் பெற்றிருந்தாலும் தன்னறிவை நன் மார்க்கத்திலே செலுத்தாதவர்களும் சரஸ்வதியின் கடாட்சத்தைப் பெற்றிலர். இவ்வாறு சரஸ்வதியின் அருளைப் பெறாதவர்களுடைய ஜீவன யக்ஞம் வீண்-நாசம்-ஆகும். ஆகையால் தங்கள் வாழ்க்கையைப் பயனுடைத்தாகச் செய்துகொள்ள விரும்பும் எவரும்; இக, பர சுகங்களைப் பெற விரும்பும் எவரும், சத்திய ப்ரியவாக்கும், நல்லறிவுமாகிய சரஸ்வதியைத் துணை கொள்வாராக.

பாரத மக்களனைவரும் சரஸ்வதியின் கடாட்சத்திற்குப் பாத்திரராவார்களாக.

# கர்ம சித்தாந்தமும் புனர் ஜென்மமும்

உலகத்தில் ஜீவனின் மறுபிறவியைக் குறித்தும், கர்ம சித்தாந்தத்தைக் குறித்தும் மூன்று அபிப்பிராயங்கள் இருந்துவருகின்றன. ஒரு சாரார் ஹிந்து—பௌத்தர் முதலியவர்கள்—கர்மத்தையும், மறுபிறவியையும் நம்புகின்றனர். மற்றொரு சாரார்—மகம்மதிய—கிருஸ்தவர்கள்—மறு பிறவி கிடையவே கிடையாதென்கின்றனர். தற்கால விக்ஞானவாதிகளுள் ஸர் ஆலிவர் லாட்ஜைப்போன்ற சிலர் தவிர மற்றவர்கள் மறுபிறவி உண்டு, அல்லது இல்லையென்று நிச்சயமாக நாம் இன்னும் சொல்லமுடியாது என்கின்றனர்.

மறுபிறவி கிடையாதென்று சொல்பவர்கள் இறந்த ஜீவன்களைக் குறித்துப் பின்வருமாறு சொல்கின்றனர். இறந்த பிணங்கள் எல்லாம் கல்லறைகளிலேயே தங்கியிருக்கும். தீர்ப்பு நாள் (Judgement Day) ஒன்று வரப்போகிறது. அப்போது கடவுள் இறந்தவர்களையெல்லாம் அழைப்பார். அப்போது எல்லா ஜீவர்களும் கல்லறைகளிலிருந்து வெளிவருவார்கள். அப்போது அவரவர்களின் பாபபுண்யங்கள் நிறுக்கப்பட்டு, விசாரிக்கப்படும். புண்யவான்கள் ஸ்வர்க்கத்திற்கும், பாபிகள் நரகத்திற்கும் அனுப்பப்படுவார்கள். இவ்வளவுதான் ஜீவர்களின் முடிவு. இது மறுபிறவி கிடையாதென்பவர்களின் மதம்.

உண்டோ இல்லையோ என்று நிச்சயம் சொல்லமுடியாத விக்ஞானிகள் தங்கள் ஆராய்ச்சியின் முடிவு இன்னும் ஒர் தீர்மானத்திற்கு வரவில்லை, தாங்கள் மறுபிறவி கிடையாதென்றும் திடமாக சொல்லமுடியாது, உண்டு என்றும் சொல்லமுடியாது என்கின்றனர். இவர்களுள் சிலர் மாத்திரம் மறுபிறவி உண்டு யென்பதை ஒப்புக்கொள்கின்றனர்.

உண்டு என்று சொல்பவர்கள் :—கீழ்வருமாறு சொல்லுகின்றனர்.

காரணாபாவாத் கார்யாபாவ: ।

காரணமின்றி காரியம் நிகழாது—எக்காரியம் நடைபெறினும் அதற்குத் தகுந்த ஒர் காரணம் இருந்தேயாகவேண்டும். ஆகவே உலகில் இப்பிறவியில்



பல ஜீவன்கள் பலநிலைகளிற் பிறந்து பலவிதங்களான இன்ப துன்பங்களை அனுபவித்துக்கொண்டிருக்கக் காரணம் இருந்தேயாகவேண்டும். இதற்கு மறுபிறவி இல்லையென்பவர்கள் :—இது கடவுள் சித்தம். கடவுள் இஷ்டப்பட்டவர்களை நற்சுகத்திலும் இஷ்டப்படாதவர்களை துக்கத்திலுமாக பிறப்பிக்கின்றார் என்கின்றனர். ஆனால் இது சரியில்லை. ஏனென்றால் கடவுள் நியாயவாதி, தயாளு, சுகஸ்வரூபர் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கின்றனர். இவ்வாறான குணங்களைப்பெற்றிருக்கும் அற்பமனிதனும் குற்றமற்றவரை தண்டிக்கமாட்டான், குற்றமற்றவரை தண்டித்து, குற்றமுற்றவரை ஆதரிப்பவரை யாரும், நியாயவாதியென்றோ, சுகபுருடன் என்றோ, தயாளு வென்றோ சொல்லமாட்டார்கள். ஆகையால் இதற்கு வேறு காரணம் இருக்கவேண்டும். அதுவே முற்பிறவிப் பயன். முற்பிறவியில் செய்த நன்மைதீமைகளின் பயன். என்றால் அது ஏன் நமக்கு ஞாபகமில்லையென்று சிலர் கேட்கின்றனர். ஆனால் சுமார் 5 வருடங்களுக்கு முன் ஆகஸ்ட் மாதம் 15ந் தேதி காலை 8 மணிக்கு என்னசெய்து கொண்டிருந்தோமென்று நமக்கு நினைவிருப்பதில்லை. சென்ற மாதம் இதே தேதி 4 மணிக்கு என்ன செய்தோம் என்பது நினைவில்லை. ஏன், சென்ற வாரத்தில் காலை நாம் சாப்பிட்ட ஆகாரம் நமக்கு நினைவில்லை! அதனால் நாம் சாப்பிடவில்லையென்று சொல்லிவிடலாமா? நம் நினைவிற்கு வராததினாலேயே ஒன்று நடைபெறவில்லையென்று சொல்லிவிடலாகாது. ஒன்றை நாம் கண்களால் காணமுடியாததினாலேயே அது இல்லையென்று சொல்லிவிடலாகாது. ஆகையால் மறுபிறவி உண்டென்பதை பழங்காலத்திலிருந்து அநேக பெரிய தபஸ்ரேஷ்டர்களின் அனுபவ வாயிலாக நாம் கேள்விப்படுகிறோம். நல்ல தெளிவையும், அதிக ஞாபக சக்தியையும் பெற்ற பெரியோர்கள் தங்கள் முற்பிறவி இன்னதாயிருந்தது என்று சொல்கின்றனர் கீதையில் கண்ணன் :—

> பஹூனி மே வ்யதீதானி ஜன்மானி தவசார்ஜுன ।
> தான்யஹம் வேத ஸர்வாணி ந த்வம் வேத்த பரந்தப ।

பொருள் :—ஏ அர்ஜுனா! நானும் நீயும் இதற்குமுன் பல பிறவிகளை எடுத்திருக்கின்றோம். ஆனால் நீ யதை அறியமாட்டாய், நான் பூரணமாக அதை அறிகிறேன்.

இவ்வுதாரணத்திலிருந்தும், இன்னும் தற்காலம் பல யௌவனக் குழந்தைகள் தங்கள் முற்பிறவிகள் இன்னதென்பதைச்சொல்ல, ஆராய்ந்து பார்த்ததில் சரியாயிருக்கக் காண்பதிலிருந்தும் மறுபிறவி உண்டென்று சொல்கிறோம்.

உதாரணமாக இவ்வியாசத்தின் கடைசியில் நாம் இரண்டு சம்பவங்களைத் தருகிறோம். அவைகள் அறிவாளிகளால் ஆராய்ந்து சரியென்று ஒப்புக்கொள்ளப் பட்டவைகளாகும். ஆதலால் முற்பிறவி இல்லையென்று சொல்ல முடியாது.

இரண்டாவது ஜீவன் நித்யமானது என்பதை எல்லா மதஸ்தர்களும் ஒப்புக்கொள்கின்றனர். மோக்ஷமோ, நரகமோ அடைந்த ஜீவன்கள் சதா அதை அனுபவித்துக் கொண்டிருக்கும் என்று சொல்பவர்கள் ஜீவன் அழிவுடையது என்று சொல்லத் துணியார்கள். அழிவு அல்லது முடிவு இல்லாத ஓர் பொருள் ஆரம்ப—துவக்க—முடையதாயிருக்க முடியாது. ஏனென்றால் உண்டாக்கப்பட்டவைகள் அழிவது திண்ணம். ஆரம்பமுடையதுகள் முடிவை யடைவதும் நிச்சயம். ஆகவே ஜீவர்கள் ஆதியும் அந்தமும் அற்றவைகள் என்று பெறப்படுகிறது. இந்த உலகம் தோன்றி பல கோடிக்கணக்கான வருடங்கள் ஆயிற்று என்று கணித நிபுணர்கள் சொல்கின்றனர். நாமோ சுமார் 30, 40, 50 வருடங்களுக்குமுன்தான் பிறந்தோம். ஆனால் உலகம் தோன்றி 30, 40, 50, வருடங்களுக்குமுன் வரை நாம் எங்கே, என்ன செய்துகொண்டிருந்தோம்? இதற்கு மற்ற மதத்தினர் என்ன சொல்லமுடியும்? ஆனால் இந்து மதம் இதற்கு விடையாக இதுவரை நாம் நம் கர்ம பலன்களுக்குத் தக்க கணக்கற்ற பிறவிகளை யெடுத்துக்கொண்டிருந்தோம். இன்னும் கணக்கற்ற பிறவிகளை யெடுத்துக் கொண்டிருப்போம். ஆகையால் மறுபிறவி இல்லையென்றால் இதற்கும் நாம் சமாதானம் சொல்ல முடியாது.

மூன்றாவது ஜீவர்கள் பிறந்ததின் பயன் முக்தியைப் பெறுவதற்காகவே என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கின்றனர். ஆனால் அதைப் பெறச்செய்ய வேண்டிய சாதனமோ பெரிது. அச்சாதனத்தைச் செய்துமுடிக்க ஒவ்வொரு பிறவி கொஞ்சமும் போதுமானதாயில்லை. ஏனென்றால் ஒரு பிறவியில் மொத்த வயது சுமார் 100 என்று வைத்துக் கொண்டாலும் குழந்தைப் பருவத்தில் 10 அல்லது 15 வருடங்கள் கழிந்து போகின்றன. கிழப் பருவத்திலும் கொஞ்சம் கழிந்து விடுகிறது. மற்ற காலத்தில் தனக்களிக்கப்பட்ட சரீரத்தை போஷிக்கும் முயற்சியே சரியாகிவிடுகின்றது. என்றால் ஜீவன் முக்தி சாதனத்தைப் புரிய நேரமேது? தவிரவும் ஒருமுறை சமயம் நேர்ந்தும் ஒரு காரியத்தைச் செய்யாமல் விட்டுவிட்டவர்களுக்கு மறுமுறையும் ஓர் சமயத்தை அளிக்கலாகாதா? தயாளுவின் கடமையல்லவா இது. ஆகையினால் முக்தி சாதனத்தைச் செய்ய ஹேதுவாக பரமன் ஜீவர்களுக்கு கணக்கற்ற பிறவிகளை



அளித்துக்கொண்டே வருகின்றார். இதனாலும் மறுபிறவி இருக்கவேண்டு மென்பதை நாம் நம்புகிறோம்.

நான்காவது, ஒருவித பிரயோஜனத்தையும் இல்லாமல் காரியங்களைப் புரிபவனை உலகம் மூடன் என்று சொல்லும். தான் புரியும் காரியத்தால் தனக்கு இன்னதுதான் ஏற்படும் என்று தெரியாமல் ஒருவன் ஓர் காரியத்தைச் செய்யமாட்டான். தீயகாரியங்களைப் புரிபவன் அதனால் தனக்குத் தண்டனை கிடைக்குமென்று தெரிவதால் அஞ்சுகிறான். தண்டனை ஒன்றும் கிடைக்காது என்று தெரிந்தால் அவன் செய்யும் தீய காரியங்களுக்கு அளவிருக்குமா? இதேபோல் நற்காரியம் புரிபவருக்கு அதனால் ஓர் நல்ல பலன் கிடைக்குமென்று தெரிந்தாலொழிய அந்நற்காரியத்தை புரிவாரா? பாபபுண்யங்களுக்குத் தகுந்த தண்டனை கிடைக்காது என்று தெரிந்தால் உலகில் யாருமே ஒரு சிறு புண்ய காரியத்தையும் செய்யமாட்டார்கள். ஆகையால் பாபபுண்ய பலன்களை யனுபவிக்க ஜீவர்களுக்கு ஓர் சாதகம் வேண்டுமென்றாகிறது. இதற்குச் சில மதத்தினர் அதற்காகத்தான் ஜீவர்கள் நரக, ஸ்வர்க்கங்களை யனுபவிக்கின்றனர் என்று சொல்கின்றனர். ஆனால் முதலில் அவ்வாறான தீய வர்ணனைகளையுடைய நரகம், நல்வர்ணனைகள்—தேன், பால், நதிகள்; அழகிய பழங்களை விருப்பப்படியளிக்கும் மரங்கள்—உடைய ஸ்வர்க்கம் இருப்பதாக யாரும் நம்புவதில்லை. விஞ்ஞானிகள் யாரும் இவ்வாறான ஓர் இடம் இருப்பதாக அனுமானிப்பதும் இல்லை. வேண்டிய உயரம்வரை ஆகாயத்திற் பறந்து செல்லும் விமானிகளும் இம்மாதிரியான இடங்களை யெங்கும் கண்டதில்லை. ஆகையால் பாபபுண்யங்களின் பலன் அங்கு கிடைப்பது பொய். அன்றி சரீர இந்த்ரியங்களின் த்வாரா புரிந்த நன்மை தீமைகளுக்கு அதே இந்த்ரியங்களின் அனுபவ பூர்வமாக கர்மபலன்கள் ஏற்பட வேண்டியது நியாயம். ஆகையால் இவ்வழியிலும் மறுபிறவியாலேயே அக் கர்மபலன் அனுபவிக்கமுடியும் என்பதை நாம் அறிகிறோம். ஆகையால் எல்லா வழிகளிலும் மறுபிறவி இருப்பதான முடிவுக்கே நாம் வர முடிகிறது.

இறந்த ஜீவன் மறுபிறவியை எப்படித் தரிக்கிறது? என்பது கேள்வி. மனிதன் இறந்துவிட்டபோது கேவலம் இத்தூலசரீரம் மாத்திரமே இறந்ததே ஒழிய ஆத்மாவுடன் அந்தக்கரணம், சித்தம், மனமாதிகள் சேர்க்கையான சூக்ஷ்மசரீரம் இந்த புரிந்த கர்ம சம்ஸ்காரத்துடன் செல்கிறது. ஆகாய, அந்தரிக்ஷ லோகத்தில் இச் சூக்ஷ்ம சரீரத்துடன் திரிந்துகொண்டிருக்கும் ஜீவன் தனக்கு சம்ஸ்காரங்களை நீக்கிக்கொள்ள சாதகமாக மற்றோர் சரீரத்தை வேண்டி நிற்கிறது. சர்வ தயவானாகிய பரமன் இதற்கு இதன் சம்ஸ்காரங்

களுக்குத்தக மற்றோர் பிறவியை அளித்து உதவுகிறார். இவ்வாறாக ஜீவன் மற்றோர் சரீரத்தைத் தரிக்கிறது. உலகில் காணப்படும் எறும்பீறாதி எல்லா ஜீவன்களும் மனிதப்பிறவியிலிருந்து தீயன புரிந்து தண்டனை வாயிலாக அவ்வப் பிறவியைப் பெற்றவைகளாகும். தண்டனை முடிந்த காலத்திற்குப் பின் மறுபடி அவைகள் கடவுள் சகாயத்தால் மனிதப் பிறவியைப் பெறுகின்றன.

ஒரு பிறவி நீங்கி மறுபிறவி வருவதற்குள் எவ்வளவு காலம் கழிகிறது, எவ்வழியாக அந்த ஜீவன் மறுபிறவியை அடைகிறது முதலாகிய விஷயங்களை கூடுமானால் அடுத்த இதழில் வெளியிட முயற்சி செய்வோம்.

இனி தங்கள் மறுபிறவியை இப்பிறப்பில் சரியாகச் சொன்ன இருவர் வாழ்க்கையை ஆராய்வோம் :—

டில்லியில் பாபு ரங்கபஹாதூர் மாதூர் என்பவர் வசித்திருந்தார். அவருக்கு 1926ம் வருடம், டிசம்பர் மீ 11ந் தேதியன்று ஓர் பெண் மகவு பிறந்தது. அதற்கு சாந்தாதேவியென்று பெயரிட்டனர். குழந்தை நன்கு வளர்ந்து கொண்டுவந்தது. வயது ஆக ஆக பெண்ணின் மனதில் ஓர்வித மாறுபாடு தோன்றலாயிற்று. அதற்கிணங்க முகத்திலும் தெரியவந்தது. வயது 4 ஆயிற்று, நன்கு பேசத் திறமையடைந்தாள். அப்போதிருந்து பூர்ண மாறுதலை யடையலானாள். பைத்தியக்காரிபோல் சிலசமயம் வெளியில் உட்காருவாள், சிலசமயம் தனியாக கூடத்திலமர்ந்து ஏதேதோ ஆலோசிப்பாள். பெற்றோர்கள் ஏதேதோ காற்றுச் சேஷ்டையென்றெண்ணி பல உபசாரங்கள் செய்யத்தலைப்பட்டனர். இதன்மேல் அப்பெண் திடீரென்று "இது என் வீடு அல்ல, என் வீடு மதுராவில் இருக்கிறது, மஞ்சள்வர்ணம் தீட்டப்பெற்ற மாளிகையாகும்" என்று சொல்லலானாள். இதைக்கேட்டபோது இவளுக்குப் பைத்தியம் என பெற்றோர் நினைக்கலாயினர். வயது 7 ஆயிற்று. "என் வீட்டினுட்புறம் இப்பக்கத்தில் ஓர் கிணறுண்டு. கிணற்றுக்கருகாமையில் ஓர் சமையலறைத் தாழ்வாரமுண்டு. என் தந்தை குமஸ்தா வேலைசெய்பவர். என்வீட்டிற்கெதிரில் ஓர் பெரிய ஜவுளிக்கடை யிருக்கிறது. சமேலி யென்னும் ஓர் தோழியும் அங்கிருக்கிறாள்." என்று சொல்லத் தொடங்கினாள். பன்முறை வேண்டியபின் தன் புருடன் பெயர் கேதாரநாத் சௌபே என்று சொன்னாள், யாரும் இவைகளை நம்பவில்லை.

ஓர் நாள் ரங்கபஹாதூருக்கு நெருங்கிய பந்து ஒருவர் இவ்வெல்லா விஷயங்களையும் தீர ஆலோசித்து, அப்பெண்மணி சொல்லும் எல்லா விஷயங்களை



யும் எழுதி மதுராவுக்கு அனுப்புவித்தார். அக்கடிதத்தைப்பெற்ற கேதாரநாத் தில்லியில் காவடி பஜாரில் தன் தமையன் வேலை செய்துகொண்டிருப்பதால் அவரைக் கலந்தாலோசிக்கும்படி பதிலெழுதினார். இதன்மேல் அவர் கேதாரநாத்தின் தமையனைக் கண்டு பெண்மணியிடம் அழைத்துவந்தார். அவரைக் கண்டவுடன் அப்பெண் "இவர் என் மைத்துனர்" என்று சொன்னாள். மைத்துனனின் கேள்விகளுக்குச் சரியான விடையளித்தாள். இச்சமாச்சாரம் கேதாரநாத்துக்குத் தெரிவிக்க அவரும் தன் 10, 15 நண்பர்களுடன் வந்து சேர்ந்தார். அதே சமயம் பெண்மணி தாவிக் குதித்துச் சென்று தன் புருடனை அடையாளம் காட்டி அழலானாள். சமாதானம் செய்விக்கப்பட்டாள், திடீரென்று தன் முற்பிறவியின் மகனைக்கண்டு மெத்தைமேலோடிச் சென்று சில விளையாட்டுக்கருவிகளைக் கொண்டுவந்து குழந்தைக்களித்து முத்தமிட்டு அதனுடன் விளையாடினாள். தன் புருடனுக்கும் தனக்கும் மாத்திரம் தெரிந்த சில இரகசியங்களை யெடுத்துச் சொன்னாள். அன்று மாலை தன் புருடனுக்கு முற்பிறவியில் செய்ததைப்போல் சமையல் செய்து இட்டமறிந்து பரிமாறினாள்.

சில தினங்களுக்குப் பின் கேதாரநாத் திரும்பி மதுரைக்குச் சென்றுவிட்டார். அப்போது அப்பெண்மணி அழுத கண்ணீர் கரைபுரண்டோடியது.

## சாந்தாதேவியும் பூர்வஜென்ம அரண்மனையும்.

மேற்கண்ட சம்பவங்கள் நடைபெற்ற சில தினங்களுக்கப்பால் தேஜ் பத்திரிகையின் நிர்வாகஸ்தர் லாலா தேசபந்து குப்தா அவர்களும், பிரபல காங்கிரஸ்வாதியான பண்டித நேகீராம் சர்மா அவர்களும் சேர்ந்து ஷாந்திதேவியை மதுராவுக்கு அழைத்துச்செல்வதாகத் தீர்மானித்தனர்.

மதுரா ரயில்வே ஸ்டேஷனில் வண்டிவந்து நின்றதும் ஷாந்தா அதிலிருந்து குதித்து வெளிவந்தாள். தேசபந்துவின் கைப்பிடியிலிருந்த ஷாந்தா திடீரென்று தன் மைத்துனரைக் கண்டுகொண்டு அவர் பாதங்களைத் தீண்டினாள். இதன் பிறகு யாரின் சகாயமுமின்றி தன் முற்பிறவி வீட்டை நோக்கிச் செல்லலானாள். வழியில் ஊரில் புதியதாக ஏற்பட்ட சீர்திருத்தங்கள் இன்னின்னவையென்று விளக்கிக்காட்டிக்கொண்டே சென்றாள். மிகுந்த பழக்கமுடையவள்போல கேதாரநாத்தின் வீட்டிற்குள் நுழையலானாள். வழியில் அமர்ந்திருந்த ஓர் கிழவனாரைக் கண்டு திடுக்கிட்டு "இதோ என் மாமனார்" என்றாள். வீட்டினுள் தான் வசித்த அறையைக் காட்டினாள், தான் தில்லியிலிருக்கும்போது குறிப்பிட்ட கிணறு இருந்த இடம், முற்றம்

களை

இருந்த இடம் இவைகளையும் விளக்கிக் காட்டினாள். அச்சமயம் அங்கு கிணறு இல்லாமல் இருந்தாலும் அங்கு கிணறு இருந்து மூடப்பட்டதாக கேதாரநாத் ஒப்புக்கொள்கிறார். இதன் பிறகு ஷாந்தா தன்னுடனிருப்பவர்களைத் தான் முற்பிறவியில் புதைத்து வைத்த பணம் இருந்துமிடத்திற்கழைத்துச்சென்று காண்பித்தாள். அங்கு தோண்டிப் பார்க்கும்போது அங்கு பணம் இருந்த அடையாளமும், வெகு சமீபத்திலேயே தோண்டியெடுக்கப்பட்ட அடையாளமும் காணப்பட்டது. வீட்டின் எஜமானிபோல் ஷாந்தா காரியங்களைப் புரிந்தாள். இதே சமயம் தன் பின்பக்கம் நின்றிருந்த கும்பலில் ஓர் பெண்மணியைக்கண்டு ஷாந்தா ஓடிச்சென்று "இதோ என் தாயார்" என்றாள். அநேக பிரயாசையின் பேரிலேயே அப்பெண்மணியிடமிருந்து ஷாந்தா விடுவிக்கப் பட்டாள். தன் தகப்பனாரையும் ஷாந்தா கும்பலில் கண்டு சொன்னாள். துவாரகாதீசனின் கோவிலைக்கண்டு ஷாந்தா வணங்கினாள். மத்ராவில் ஷாந்தா தங்கியிருந்தவரை தன் முற்பிறவி மகனைக்கூடவே வைத்துக்கொண்டிருந்தாள்.

இவைகள் எல்லாம் முழுதும் உண்மையென்று பண்டிட் நேகிராம் சர்மாவும், லாலா தேசபந்து குப்தாவும் சேர்ந்து சாக்ஷியளித்திருக்கின்றனர்.

திரள் திரளாக ஜனங்கள் ஷாந்தாவைக்காண திரண்டு சென்றுகொண்டிருக்கின்றனர்.

## புனர் ஜென்மமும் ஆங்கிலப் பெண்மணியும்.

ஆங்கில நாட்டில் ஓர் பெண்மணி வசித்துவந்தாள். ஒரு சமயம் அவள் தன் தாயுடனும் தமயனுடனும் இதுவரை அவள் சென்றறியாத ஓர் ஊரைக் காணச் சென்றாள். ரயில் குறிப்பிட்ட ஸ்டேஷன் வந்து நின்றது. மூவரும் வண்டியை விட்டிறங்கினர். ஊருக்குள் செல்லலாயினர். திடீரென்று அப்பெண்மணி! "அம்மா! இது என்ன! இந்த ஊர் எல்லாம் எனக்கு அறிமுகமானதாகத் தெரிகிறதே. இவ்வூரின் ஒவ்வோர் அடிப் பிரதேசமும் எனக்கு நன்றாகத் தெரியும்" என்றாள். அப்பெண்ணின் தாயார், 'போடி பைத்தியக்காரி, நீ பிறந்தபின் ஒரு முறையாவது நீயோ நானோ இவ்வூருக்கு வந்ததில்லை. பின் எப்படி இவ்வூர் உனக்குத் தெரியக் கூடும்?" என்றாள். அதற்குப் அப் பெண்மணி "இல்லையம்மா, நான் உளற வில்லை. நான் பிறந்த பின் இங்கு வந்திருக்கின்றேனோ இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால் இவ்வூரில் நான் சுமார் 10, 15 வருடங்கள் வாசம் செய்திருந்ததாக எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. நான் சொல்வது பொய்யென்றால் என்னுடன்



வாருங்கள். இந்தந்தத் தெருவில் இன்னின்ன மாளிகைகள், கடைகள், விசேஷங்கள் இருக்கின்றன என்று நான் காட்டுகிறேன்" என்றாள். வியப்பே உருக்கொண்ட அப்பெண்மணியின் தாயும் தமையனும் பேசாமல் அவள் பின்னே செல்லலாயினர். அப்பெண்மணி அவர்களை பல இடங்களுக்கு அழைத்துச் சென்று பல மாளிகைகளையும், கடைகளையும், விசேஷங்களையும் காண்பித்தாள். முடிவில் அவர்கள் ஓர் சிறுமலையின் அடிவாரத்தில் வந்து சேர்ந்தனர். உடனே அப்பெண்மணி "அம்மா!" இதோ இதோ! இப்போது எனக்கு எல்லாம் விளங்கியது. இம்மலைமேல் நான் ஊதாவர்ண சிறுஜாக்கெட்டை யணிந்து என் இருதோழிகளுடன் பன்முறை விளையாடி இருக்கிறேன். அப்போது என் பெயர் மார்க்ரேட் என்றிருந்தது. ஒருசமயம் வழக்கம்போல் என் தோழிகளுடன் இதன்மேல் அதோ தெரியும் அவ்விடத்தில் விளையாடிக் கொண்டிருந்துவிட்டு கீழே வரலாயினேன். மழைபெய்து எங்கும் வழுக்கலாக இருந்தது. நான் என் இருதோழிகளின் கைகளையும் இரண்டு பக்கங்களில் பிடித்துக்கொண்டு இறங்கி வேகமாக வந்துகொண்டிருந்தபோது திடீரென்று கால் சருக்கி என் தோழிகளுடன் கீழே விழுந்தேன். என் தோழிகள் சிறு காயங்களுடன் தப்பித்துக்கொண்டனர். ஆனால் நானோ பெரிய காயமடைந்து மூர்ச்சையாயினேன். அதன்பின் நடைபெற்றது எனக்கு நினைவில்லை" என்றாள். பெண்மணியின் தாயும் தமையனும் ஒன்றும் புரியாமல் இனி அங்கிருப்பதும் தகாதென நினைத்து பெண்மணியுடன் தங்கள் சொந்த ஊருக்கு வந்து விட்டனர்.

சில ஆண்டுகள் கழிந்தன. அப்பெண்மணிக்கு விவாகம் ஆய்விட்டது. ஒருசமயம் தன் புருடனுடன் அப்பெண்மணி மறுபடி தன் பூர்வஜன்ம ஊருக்குச் சென்றிருந்தாள். பல விடங்களைச் சுற்றிப்பார்த்தபின் ஓர் ஓட்டலில் அமர்ந்து இருவரும் ஆகாரம் புசித்துக் கொண்டிருந்தனர். அவ்வறையின் சுவர்களில் பல படங்கள் மாட்டப்பட்டிருந்தன. அதில் ஊதாவர்ண சிறு ஜாக்கெட்டை யணிந்த ஓர் பெண் இருபக்கங்களிலும் இரு பெண்களின் கைகளைப் பிடித்துக்கொண்டு நின்றிருந்த பாவனையுடன் ஓர் படம் மாட்டப்பட்டிருந்தது. அதைக்கண்ட அப்பெண் தன் புருடனை நோக்கி "நாதா! இதோ இது என் படம். மத்தியிலிருப்பது நான். இரண்டு பக்கங்களிலும் இருப்பது என் இரு தோழிகள்" என்றாள். வியப்படைந்த அவளின் புருடன் அவ்வோட்டலிலிருந்த ஓர் மாதையழைத்து அப்படத்தைக் சுட்டிக் காட்டி அது யாருடைய படம் என வினவ, அம்மாது "ஐய! இதில் அதோ வலது பக்கத்தில் நிற்பது என் பேத்தி. இவள் கொஞ்ச தூரத்திற் கடுத்துள்ள குடியானவரின் மகள் மார்க்ரேட் என்பவளுடன் வெகு நட்பாக இருந்துவந்தாள்

இப்படத்தின் மத்தியில் காணப்படுவது மார்க்ரேட் தான். மற்றோர் பக்கமிருப்பதும் மார்க்ரெட்டின் ஓர் தோழியாகும். இம்மூவரும் ஒருசமயம் அதோ தெரியும் மலைமேல் விளையாடியிருந்து இறங்கிவரும்போது தவறி விழ மார்க்ரெட் மரணமடைந்தாள். மற்ற இருவரும் சிறு காயங்களுடன் தப்பித்துக்கொண்டனர்'' என்றான்.

பல ஆராய்ச்சியாளர்கள் இச்சம்பவத்தின் உண்மைகளையாராய்ந்து இவை யாவும் உண்மையே யென்றும், அப்பெண்மணிதான் முற்பிறவியில் மார்க்ரெட்டாக இருந்தாளென்றும் தீர்மானித்தனர்.

வாசகர்களே! இப்போது சொல்லுங்கள். புனர்ஜென்மம் உண்டா இல்லையாயென்று.

---

# வர்ண வியவஸ்தாவில்

## மகாத்மா காந்தியார்

## ஆரியசமாஜ சித்தாந்தங்களை ஒப்புக்கொண்டார்.

எல்லா வழிகளும் ரோமுக்கே சென்று முடிகிறது என்ற கருத்தைக் கொண்ட ஓர் ஆங்கிலப் பழமொழி உண்டு.

சத்தியம் எல்லா அண்டசராசரங்களுக்கும் ஒன்றே. தீவிரவாதிகள் தெளிந்தஞான, சம்ஸ்காரங்களையுடையோர் அதை வெகு எளிதில் அறிந்து கடைப் பிடிக்கின்றனர். மந்தமதியினர் சிறிது பிரயாசையின்பேரில் அதை அறிந்து கைக்கொள்கின்றனர். தீய மதியுடையோர் வெகுகால முயற்சியின் பேரில் பல கஷ்டங்களுக்குப் பின்னதை அறிந்தேற்றுக் கொள்கின்றனர். கால அளவில், அடையும் மார்க்கத்தில் இவர்களுக்குள் அநேக வித்தியாசங்களிருப்பினும் முடிவில் எல்லோராலும் அடையப்படுவது சத்தியம் என்ற ஒன்றே.

பாரத நாட்டின் பெருமை அழியத்தடங்கி, சத்தியம், தர்மம் மறைந்து அசத்தியம், அதர்மம் தோன்றி முதிர்ச்சியடைந்துகொண்டே வந்துகொண் டிருந்த காலத்தில் இன்றைக்குச் சுமார் 50 வருடங்களுக்குமுன் கீதையின்

யதாயதா ஹி தர்மஸ்ய க்லானிர்பவதி பாரத ।
அப்யுத்தானமதர்மஸ்ய ததாத்மானம் ஸ்ருஜாம்யஹம் ॥

பொருள் :—எப்பொழுது தர்மம் அழிந்து, அதர்மம் முதிர்கிறதோ அவ்வப்பொழுது அதர்மத்தை அழித்து தர்மத்தை வளரச்செய்ய நான் பிறப்பேன். (என்றால் கடவுள் அவதாரம் செய்கிறார் என்று அர்த்தமல்ல. ஆனால் பமோப காரப் பெரியோர்கள் அதர்ம முதிர்ச்சிக் காலங்களில் அதையழித்து நன்மையை நிலை நாட்டும்பொருட்டு பிறப்பார்கள் என்பதே) என்ற வார்த்தைக்கிணங்க மஹரிஷி ஸ்வாமி தயானந்த சரஸ்வதியார் பாரத நாட்டில் அவதரித்தார். உண்மைத் தத்துவங்கள் மறைந்து அசத்திய மார்க்கத்தில் நிலவிவந்த வர்ணாஸ்ரமதர்மத்தைத் திருத்தி சத்தியமானதாக ஆக்கினார். வர்ணாஸ்ரமத்தின் சரி.

யான முறையைக் குறித்து தயானந்தர் சொல்லியிருப்பதை சத்தியார்த்தப் பிரகாசம் எனும் நூலில் காணலாம்,

50 வருடங்களுக்கு முன் ரிஷி கண்டு புதுப்பித்த வர்ண வியவஸ்தா சித்தாந்தங்களைப் பல ஆராய்ச்சியின் பேரில் தற்காலத்தில் மஹாத்மா காந்தியாரும் ஒப்புக்கொண்டுவிட்டார். காந்தியார் வர்ணத்தைக் குறித்துச் சொல்லும் முடிவுகள் எல்லாம் ஆரிய சமாஜ முடிவுகளுக்குப் பூரணமாக ஒத்திருக்கிறது. வாசகர்கள் அறியும் பொருட்டு காந்தியார் ஒப்புக்கொள்ளும் அவ் விஷயங்களை கீழே வரைகிறோம் :—

1. நான் வேதம் விதிக்கும் வர்ணாஸ்ரமத்தை அப்படியே சரியென்று ஒப்புக்கொள்கிறேன். சில ஸ்ருதிகள், சில கிரந்தங்களில் மாறுபாடு காணப்பட்டபோதிலும் மனிதர்கள் எல்லோரும் சமமானவர்கள் என்பதை நான் நம்புகிறேன்.

2. அச்சிடப்பட்ட எல்லா புஸ்தகங்களின் ஒவ்வொரு சப்தத்தையும் சாஸ்திரமாக ஒப்புக்கொள்ளவேண்டுமென்று நான் கொஞ்சமும் ஒப்புக்கொள்ளமாட்டேன்.

3. நாம் எதை ப்ரமாண வசனமாக நம்புகிறோமோ அவைகளின் வியாக்கியானங்கள் காலத்திற்குத்தக மாறுதல்களையடைகின்றன. நம் புத்தி ஹ்ருதயத்தைப்போலவே வியாக்கியானங்களுக்கும் கணக்கற்ற மாறுதல்களுக்கு இடமிருக்கிறது.

4. சாஸ்திரங்களிற் காணப்படும் ப்ரத்யக்ஷ, சர்வவியாபக, சத்ய, சதாசாரங்களுக்கு விரோதமான வார்த்தைகள் நிலைத்திருக்கக்கூடியவைகள் அல்ல.

5. யுக்தி வாதத்தில் சித்தம் செய்யப்படவேண்டிய சாஸ்திரங்களின் எப்பொருளாயினும் புத்திக்கு மாறுபட்ட முறையில் செல்லுமாயின் அதுவும் நிலைக்கக்கூடியதாகாது.

6. சாஸ்திரங்களில் வர்ணித்திருக்கும் வர்ணாச்ரமம் தற்காலம் பூரணமாக மறைந்து போய்விட்டது.

7. தற்கால ஜாதிபேதம் வர்ணாஸ்ரமத்திற்கு முற்றிலும் விபரீதமானதாகும். உலகம் இதை எவ்வளவு சீக்கிரத்தில் நஷ்டம் செய்யுமோ அவ்வளவும் நல்லதே.

8. வர்ணாஸ்ரமத்தில் அந்யவர்ணங்களின் ஆகார, மண சம்பந்தங்களில் ஒன்றும் தடுக்கப்படவில்லை, தடுக்கப்படவும் கூடாது. தடை தங்கள் சுய



நலத்தை நாடியும், வம்சத்தவர்களின் சுகபோகங்களை யுத்தேசித்துமே ஏற்படுத்தப்பட்டது. இதனால் தற்கால ஜாதிப் பிரிவில் இரண்டு குற்றங்கள் இருக்கின்றன. ஓர் பக்கம் ஆகார, மணசம்பந்தமாய் நிர்த்தயை செலுத்தப்படுகிறது, ஆனால் மறுபக்கத்தில் தொழில்களில் மாத்திரம் அவ்வாறான பேதம் பாராட்டப்படுகிறதில்லை. யார் எத்தொழிலையும் செய்யலாம்.

9. வர்ணாஸ்ரமத்தில் ஆஹார, வ்யவகாரங்களில் ஓர் தடையுமில்லாவிட்டாலும் அதில் பலவந்தம் செலுத்தப்பட முடியாது. பெண், புருடர்கள் விவாகம் செய்யப்படவேண்டிய கடமை அவர்களின் நிர்வாக இச்சைக்கு விட்டுவிடவேண்டும். வர்ணாஸ்ரமம் சரியாகப் பாலிக்கப்படுமாகில் விவாகம் செய்துகொள்ளவேண்டியவர்கள் தங்கள் வர்ணங்களுக்குள்ளேயே செய்துகொள்ளலாம்.

10. சாஸ்திரங்களில் 'பிறப்பினால் ஒருவன் தீண்டத்தகாதவனாகிறான்' என்று எங்கும் காணப்படவில்லையென்று நான் பன்முறை சொல்லியிருக்கிறேன். ஆகையால் தற்காலத்திய இத் தீண்டாமையை ஹிந்து தர்மத்தின் ஓர் பெரிய கலங்கமென்றும், பெரிய பாபமென்றும் நான் நம்புகிறேன். இத் தீண்டாமை நீடித்திருக்குமாயின் ஹிந்து தர்மம் அழிந்துபோய்விடுமென்று நான் பலமுறை சொல்லியிருக்கிறேன்.

11. ஜாதியை ஒழிக்க எல்லாவற்றிலும் மேலானது, எல்லாவற்றிலும் தீவிரமானது, எல்லாவற்றிலும் தாழ்மையானது சீர்திருத்தவாதிகள் முதலில் தங்களை அதனின்றும் மீட்டுக்கொள்வதே. அதனால் ஏற்படும் சமூக தண்டனைகளை யேற்றுக்கொள்ள சிரத்தை வணங்கி யளிக்க வேண்டும். நாஷிப்பதாலும், துன்புறுத்தி பலவந்தம் செய்வதாலும் பலன் ஏற்படாது. மாறுதல் கொஞ்சம் கொஞ்சமாகவே ஆகும், எப்படியாகுமென்பதையும் நாம் நிச்சயமாய் சொல்ல முடியாது. நீச வர்ணத்தவர்களென்று சொல்லப்படுபவர்கள் மேல் உச்சவர்ணத்தவர்களென்று சொல்லப்படுபவர்கள் ஏதாவது ஓர் ப்ரபாவத்தைச் செய்யலாம். இதற்குமுன் தங்களின் பதத்தை கொஞ்சம் தாழ்த்திக்கொள்ள வேண்டும். பலகாலத்திய கிராம புனருத்தாரண வேலையால் நாம் கிராமவாச நீச வர்ணத்தவர்களுக்கும், நகரவாச உச்சவர்ணத்தவர்களுக்கும் மத்தியில் ஏற்பட்டிருக்கும் பிளவை அடைத்தல் மிகமிக கடினமானது என்பதை அறிகிறோம். இவ்விரண்டும் சமமானவைகளுமல்ல. ஏனென்றால் வர்க்கபேதம் நகரங்கள், கிராமங்கள் இரண்டிலும் நிலவியிருக்கிறது.

# வினவிடை

(ஸ்ரீ. பண்டித கே. ஞானி.)

## 1. ஆர்யசமாஜம் காங்கிரஸ்ஸிற்கு விரோதமானதா?

இக்கேள்வியை சில ஹிந்து சகோதரர்கள் நம்மைக் கேட்கும்போது நமக்கு மிகுந்த ஆச்சரியமுண்டாகிறது. காங்கிரஸ் தேச விடுதலைக்காக உழைத்து வருகின்றது. ஆர்யசமாஜம் தேச விடுதலையை எளிதில் பெறும் மார்க்கத்தில் மக்களுக்கு உணர்ச்சி யூட்டிவருகிறது. ஆரியசமாஜம் நேர் முகமாக காங்கிரஸ்ஸுடன் சேராவிட்டாலும் தன் பல அங்கத்தினர்களை காங்கிரஸ்ஸுடன் உழைக்கும்படி அனுப்பிவைத்திருக்கிறது. லாலா லஜ்பத் ராய், சுவாமி சிரத்தானந்தர், பாய் பரமானந்தர் முதலியோரும், மற்றும் அநேக தலைவர்களும் ஆரியசமாஜிகளா யிருந்தும் காங்கிரஸ்ஸுடன் ஒத்து உழைத்ததை—உழைத்துவருவதை—அறியாதார் யார்? தனிப்பட்ட முறையில் ஆரியசமாஜ் அங்கத்தினர்கள் யாரும் காங்கிரஸ்ஸுடன் சேர்ந்து உழைப்பதை சமாஜம் தடைசெய்வதில்லை.

அரசாங்கம் எப்பொழுதும் இரண்டு பிரிவுகளை யுடையது. ஒன்று பூரணமாக அரசாங்க சம்பந்தத்திலேயே உழன்றிருப்பது. மற்றொன்று சமூக சம்பந்தத்திலே உழன்று மக்களுக்கு அரசாங்கத்தைப் பாதுகாக்கக்கூடிய முறைகளைக் கற்பித்து, அதை நிர்வகிக்கவேண்டிய பலத்தையும் அளித்துவருவது. காங்கிரஸ்ஸை முற்பிரிவில் சேர்த்தால் ஆர்யசமாஜத்தை பிற்பிரிவில் சேர்க்கலாம். ஏனென்றால் காங்கிரஸ் வேண்டிநிற்கும் வீரத்தியாகபல புருடர்களை ஆர்ய ஸமாஜமே உண்டாக்குகிறது. கணக்கற்ற குருகுலங்களை ஸ்தாபித்து அதன் மூலமாக கணக்கற்ற வீரத்தியாக புருடர்களை ஸ்ருஷ்டிசெய்து வருகிறது. ஸ்வாமி சிரத்தானந்தர், ராஜ்பால், பண்டிட்லேக்ராம் ஆகிய வீரத்தியாகிகளெல்லாம் தங்கள் நாட்டின், சமூகத்தின் அபிவிருத்திக்காகவே உயிரையும் அர்ப்பணம் செய்தனரென்று அறியாதார் யார்? பரோபகாரமே உருவாகக் கொண்ட இப்பெரியார்களின் கொலைச்சம்பவங்கள் ஹிந்துமக்களின் உள்ளங்களை விட்டகலுமா? ஆரியசமாஜ் ஸ்தாபகரான மஹரிஷி தயானந்த சரஸ்வதியாரும் சமூக சேவையிலேயே பார்ப்பனரால் அளித்த கண்ணாடித் தூளாலன்றோ மரணமுற்றார்!



இந்திய நாட்டின் பல சிற்றரசர்களுக்கு தயானந்தர் அளித்த பாடங்களை யார் அளித்திருக்கக்கூடும்? ஓர் சமயம் உதயபுர அரசருக்கு ஸ்வாமிகள் அளித்த உபதேசமாவது:—"அரசர்பெரும! பூரண நியாயத்தை யனுசரிப்பதாயினும், நீதிவழுவாமல் செங்கோல் புரிவதாயினும், மக்களுக்கு எல்லா வழிகளிலும் நலன் புரிவதாயினும் இன்னும் எவ்வள நன்மைகள் கொண்டதாயினும் விதேச ராஜ்யம் நல்லதாகாது. "சுயராஜ்ய வாழ்வே சுகவாழ்வு." ஆஹா! என்ன அற்புதமான உபதேசம்! யாரே இவ்வாறு கற்பிக்கமுடியும்! மற்றோர் அரசருக்கீந்த உபதேசம் வருமாறு:—"வேந்தே! குடிகளிடமிருந்து வரி வசூல் செய்வது எவ்வாறிருக்க வேண்டுமெனில் குடிகள் தாங்கள் வரி யளிப்பதாகவே நினைவில்லாமல் சந்தோஷமாகக் கொடுக்கக்கூடிய முறையில் இருக்கவேண்டும். அவ்வாறு வசூல்செய்யப்பட்ட எல்லாவற்றையும் மறுபடி குடிகளின் நன்மைக்காகவே செலவழிக்கவேண்டும். கடல்நீர் பரிதியின் வேகத்தால் ஆவியாகி மேலேசென்று மேகமாகின்றது. ஆனால் அது அங்கேயிருந்து விடுவதில்லை. மறுபடி மழைரூபமாகப் பொழிந்து மக்களுக்கு வேண்டிய உணவிற்கு உதவிசெய்து மறுபடி தன்பிறந்த இடமாகிய கடலையே சென்றடைகிறது. இதேபோல் தான் அரசர்களும் ஒழுகிவரவேண்டும்." என்ன கருத்து! எவ்வளவு உன்னத உபதேசம்!

முதன்முதலில் 'ஸ்வராஜ்யம்' என்ற பதத்தைச்சொன்னவர் ஸ்வாமி தயானந்தர்தான். இவ்வுண்மையை அவரால் இயற்றப்பட்ட சத்தியார்த்தப் பிரகாசம் எனும் நூலில் விளக்கமாகக்காணலாம். தயானந்தரால் சொல்லப்பட்ட இதையே அவருக்குப்பின் லோகமான்ய திலகராதிப் பெரியோர்கள் நடைமுறையில் கொண்டுவர முயற்சித்தனர். இதன் பலனாகத் தோன்றியது தான் காங்கிரஸ் மஹாசபை.

அரசாங்கம் பலம் பெற்றிருக்கவேண்டுமென்றால் அதை நடத்தும் மக்கள் பூர்ணபலம் பெற்றவர்களாக இருக்கவேண்டும். அவ்வாறான பூர்ணபல வீர சிகாமணிகளை சிருஷ்டிசெய்யும் பிரம்மாதான் ஆரியசமாஜம். ஆதலின் வாசகர்களே ஆரியசமாஜம் காங்கிரஸ்ஸிற்கு விரோதமான ஸ்தாபனம் என்று நீங்கள் கனவிலும் கருதாதீர்கள்.

## 2. ஆர்யசமாஜத்திற்கும் இந்துமஹாசபைக்கும் என்ன வித்தியாசம்?

சுமார் 100 ஆண்டுகளுக்குமுன் இந்தியாவில் ஆர்யசமாஜம் ஸ்தாபிக்கப்பட்டது. அது மக்களை யெல்லாவழிகளிலும் சீர்திருத்திக்கொண்டு வந்தது.

மூர்த்தி பூஜை, சிரார்த்தம் இவைகளின் பொய்மையை மக்களுக்கு விளக்கிக் காட்டியது. தீண்டாமை என்பது சாஸ்த்ர, யுக்தி, அனுமானங்களுக்கு விரோதமானது, அதனால் ஹிந்துமதம் பாழடைந்துகொண்டு வருகிறது. இப்போதாவது தீண்டாமை ஒழியாவிட்டால் இந்துமதம் அழிந்துவிடுவது திண்ணம் என்ற உண்மைகளையும் மக்களுக்குணர்த்தி வந்தது. பால்ய மணத்தால் நேரும் கணக்கற்ற தீங்குகளை யெடுத்துக்காட்டியது. பால்ய மணத்தின் காரணமாகத் தோன்றும் பால்ய விதவைகளுக்கு மறுமணம் செய்விக்காமையால் நேரும் அவமான, ஆபத்துக்களையும் விளக்கிக்காட்டிற்று.

இவ்வாறான ஆர்யசமாஜ உபதேசங்கள் கொஞ்சங்கொஞ்சமாக மக்களின் உள்ளங்களிலே பரவிக்கொண்டு வந்தன. நாளாவட்டத்தில் மக்களிற் சிலரெல்லாம் அக்ஞானத்தைவிட்டு ஞானத்தில் நுழையலாயினர். அப்போது அவர்களின் மனங்கள் தேச, சமூக நிலையில் ஊடுருவிச்செல்லவும் அவைகளின் தாழ்ந்த நிலைகளை யறிந்து பரிகாரம் தேட வேண்டுமென்ற உணர்ச்சியும் உண்டானது.

இக்காலத்தில் வடநாட்டின் சில பாகங்களில் மல்கானுக்கள் என்ற ஒரு ஜாதியினர் வசித்துவந்தனர். அவர்கள் முற்காலத்தில் பூர்ண ஹிந்துக்களாக இருந்தவர்கள். ஓர் காலத்தில் பலவந்தமாக எல்லோரும் மகம்மதியர்களாக்கப்பட்டனர். ஆனால் தங்களின் விருப்பங்களுக்கு சம்மதமற்ற முறையில் மகம்மதியர்களானதினால் அவர்கள் பெயரளவில் மாத்திரம் மகம்மதியர்களா யிருந்தனரே யொழிய மற்ற பூஜை, ஆசாரமாதி எல்லா விஷயங்களிலும் ஹிந்துமத சித்தாந்தங்களையே அநுசரித்து வந்தனர். ஆர்யசமாஜ உபதேசங்கள் கொஞ்சங்கொஞ்சமாக வளர்ந்து நாளடைவில் இம்மல்கானுக்களின் உள்ளங்களுக்கும் சென்றெட்டியது. அப்போது உணர்ச்சியடைந்த அவர்கள் உடனே தங்கள் பூர்வீக, தாய்மதமாம் இந்துமதத்தைத் தழுவ தீர்மானித்துக்கொண்டனர். ஆகவே அவர்கள் பல ஹிந்துப் பெரியோர்களை யணுகி தங்கள் கருத்தைத் தெரிவித்தனர். அவ்விந்துப் பெரியோர்கள் அதற்காக ஆரியசமாஜத்தின் உதவியை நாடிச்சென்றனர். ஹிந்துத் தலைவர்களும் ஆர்யசமாஜத்தலைவர்களும் ஒன்றுகூடி ஆலோசித்தனர். ஹிந்துத் தலைவர்களிற் சிலர் மல்கானுக்களை ஹிந்துக்களாகச் செய்வதிலும், அவர்களுடன் சகோதர பாவனையாக நடந்துகொள்வதிலும் சம்மதமடைந்தனர். ஆனால் ஆரியசமாஜ சித்தாந்தங்கள் முழுவதையும் அப்படியே பெற்றுக்கொள்ள அவர்கள் விரும்பவில்லை. ஆகவே இதை ஒரு வழிப்படுத்த ஆரியசமாஜத்திற்கும் சாதாரண இந்துமதத்திற்கும் மத்தியில் இரண்டின் தொடர்பையும் கொண்டதாக "ஹிந்து மஹாசபை" என்ற ஓர் சபையை நிருவினார்கள். மதன் மோஹன மாளவியா, பாய் பரமானந்தர், சிரத்தானந்தர் முதலியோர்கள் அதை முன்னின்று நடத்த ஒப்புக்கொண்டனர். அதன்பேரில் சுவாமி சிரத்தானந்தர் 25 லட்சம் மல்கானுக்களையும் சுத்திசெய்து ஹிந்துமதத்திற் சேர்த்துக்கொண்டார். ஹிந்து மஹாசபை அதை பூர்ணமாக ஆதரித்தது. ஆகவே இந்து மஹாசபை யென்பது இந்துமதத்தின் சீர்திருத்தங்களுள் ஹிந்துக்களை ஒற்றுமைப்படுத்தல், பிற மதத்தினரை சுத்திசெய்து ஹிந்துமதத்திற் சேர்த்துக்கொள்ளல் ஆகிய காரியங்களை ஏற்றுக்கொண்டது. மற்ற சீர்திருத்தங்களை ஆர்யசமாஜம் செய்து வருகிறது. இரண்டு சபைகளின் தாரதம்யத்தை அறிய இவ்வளவு போதுமென்று நினைக்கிறோம்.

டிசம்பர்மாதம் பூனாவில் மாளவியாஜீ அவர்களின் தலைமையின்கீழ் இந்துமகாசபை மஹாநாடு நடக்கப்போகிறது. அதன் முழு விவரங்களையும் அறிந்துகொள்ள விரும்புபவர்கள் அங்கு சென்று கண்டறியலாம். ஆனால் இப்பத்திரிகை நம் வாசகர்களின் கைக்கெட்டும் சமயத்தில் மஹாநாடு பூராவும் முடிவடைந்திருக்கும். ஆகையால் இவ்வெச்சரிக்கை வீணே. ஆயினும் மஹாநாடு நடைபெற்றது என்றுவது தெரியுமானால் பத்திரிகைகள் வாயிலாக அங்கு நடந்த சம்பவங்களை அறிந்துகொள்ளலாகுமென்றே இவ்வெச்சரிக்கைக் குறிப்பை வரைந்தோம்.

## 3. யக்ஞம் (வேள்வி) புரிதல் மூர்த்தி பூஜையல்லவா?

"ஆரிய சமாஜத்தார் கோவில்களில் சென்று விக்ரகங்களை வணங்குதல் பயனற்றது, அவ்வாறு செய்தல் விரோதம், மிகத் தவறு என்கின்றனர். ஆனால் அவர்களோ அவர்களின் கோவில்களாகிய ஆர்ய மந்திரங்களில் வாரம் ஒரு முறை கூடி சில குச்சிகளில் நெருப்பையிட்டு அது எரியும்போது நெய், இன்னும் சில வாசனைத்திரவியங்களை அதில் கொட்டி சுற்றிலுமமர்ந்து வேத மந்திரங்களைச்சொல்லி அதை வணங்குகின்றனர். இதுவும் ஒருவித மூர்த்தி பூஜையல்லவா? பின் ஏன் அவர்கள் மற்றவர்களுடையதைத் திட்டுகின்றனர்?" என்று கேட்கின்றனர் சில அன்பர்கள்.

ஆம், உண்மைதான். நெருப்பை வளர்த்தல், அதில் நெய், சுகந்தப் பொருள்களையிடல், சுற்றிலும் அமர்ந்து வேதமந்திரங்களைச் சொல்லல் இது வரை உண்மைதான். ஆனால் கடைசியில் சொல்லும் அதை வணங்குதல் என்பது தான் தப்பேயாம். பின் அவ்வாறு செய்வதின் தாத்பர்யமென்ன என்பதை விளக்குவோம்.

வியாதியுற்ற ஒருவன் வைத்தியனை நாடிச்செல்வது எதற்காக ? வைத்தியன் வியாதியின் தன்மைகளையும், அதை நிவர்த்திப்பதற்கு வேண்டிய பொருள்களையும் அறிந்திருப்பதாலேயே. வைத்தியன் நோயாளிக்கு அளிக்கும் பொருள் நோயாளியின் வீட்டிலேயே சதா இருக்கும் மிளகேயாயினும் நோயாளி அம்மிளகின் தன்மைகளையும், அதன் உபயோகத்தையும் அறிந்திருக்கவில்லை. வைத்தியன் மிளகிற்கு இன்னின்ன தன்மைகளுண்டு, அதை இவ்விவ்வாறு செய்தருந்துவதால் இன்னின்ன பலன்களுண்டாகுமென்பதை அறிந்திருக்கிறான்.

நம் வீட்டுப் புறக்கடையில் கணக்கற்ற செடிகொடிகளிருக்கின்றன. ஆனால் அவைகள் என்ன என்பதையும், அவைகளால் நமக்கென்ன உதவியென்பதையும் நாமறியவில்லை. அதே இடத்தில் ஓர் வைத்தியன் வந்த காலத்தில் அங்கிருந்த செடிகளில் சிலதை வெகு ஆவலுடன் பிடுங்கி பத்திரமாகவெடுத்துச் செல்கிறான். ஏன் ? அவன் அச்செடியின் குணகுணங்களை அறிந்திருப்பதால் தான். ஒரு பொருளின் தன்மையை அறியாதவர்கள் அதன் உபயோகத்தை ஏற்றுக்கொள்ள முடியாது.

கடவுள் இப்பெரிய பூவுலகத்தையும், இதற்கு உஷ்ணமாதிகளையளிக்க சூர்ய, சந்திர, நக்ஷத்திராதிகளையும், ஜீவர்கள் உயிர்பெற்றிருக்க காற்றையும், ஆகாரத்திற்காக அழகிய கணக்கற்ற பழவிருட்சங்களையும் உண்டாக்கியிருப்பதைப்போலவே அக்னி என்றதையும் உண்டாக்கி யிருக்கிறார். அவ்வக்கினியால் நாம் என்னென்ன உதவிகளைப் பெறமுடியும் என்பதை ஆராயவேண்டியது அறிவாளிகளின் கடமையாகும்.

ஆகாய விமானம், ரயில், கப்பல், நீர்மூழ்கி, துப்பாக்கி, பீரங்கியாதி தற்கால விக்ஞானப்பொருள்கள் நடைபெறுவதற்கெல்லாம் அக்கினியே காரணமென்று சொல்வதில் என்ன சந்தேகம் ? மின்சாரம் அக்கினியல்லவா ? அதனால் மனிதர்களுக்கு எவ்வளவு உதவிகள் கிடைக்கின்றன ! சூரியன் அக்னிகோளமன்றோ ; அது இல்லாவிட்டால் மனிதர்கள் வாழ்ந்திருக்க முடியுமா ? அக்கினியில்லாத இடத்தை யாராவது காண்பிக்க முடியுமா ? ஏன் இல்லை ? மலைகள்மேல் இருக்கும் பனிக்கட்டிகளில்கூடவா அக்கினியிருக்கிறது ? ஆம், அவசியம் இருக்கிறது. ஆனால் சித்திரை மாதங்களில் சென்னையில் இருக்கும் அளவைப்போலல்ல. குறைந்த அளவில் இருக்கிறது. சீதளம் என்பது குறைந்த உஷ்ணத்தின் பெயரே. இவருக்கு சீதளம் மிக அதிகமாகிவிட்டது என்றால் அதன் பொருள் இவரின் உஷ்ணம் அதிகமாகக் குறைந்துவிட்டது என்பதேயாகும்.



இத்தன்மைகள் வாய்ந்த அக்கினி பலவழிகளில் மனிதர்களுக்கு உபயோகப் படுவதைப்போலவே மற்றோர் முக்ய வழியிலும் அது மனிதர்களுக்குப் பெருத்த உதவியை அளிக்கும் என்பதை பழங்கால ஆரியர்கள் அறிந்திருந்தனர். அதுவே யக்ஞம்.

மனிதர்கள் சதா நல்ல காற்றை உட்கொண்டு கெட்ட காற்றை வெளிவிடுகின்றனர் என்பது எல்லோரும் அறிந்தது. இருட்டறையில், வெளிக்காற்றுப் புகமுடியாத ஓர் அறையில் ஒரு மனிதனை அடைத்துவிட்டால் அவன் சில மணி நேரங்களுக்குள் இறந்துவிடுவான். ஏன் ? அங்கு காற்றில்லை. தீய காற்றை உட்கொள்வதால் மனிதர்கள் எண்ணிறந்த வியாதிகளுக்குட்படுகின்றனர். பல மனிதர்கள் ஒன்றுகூடும் சமயங்களில் அவ்விடத்தில் காற்றின் சுத்தத் தன்மை வெகு சீக்கிரம் மனிதர்களால் உட்கொள்ளப்பட்டு, அவர்கள் வெளிவிடும் துர்க்கந்தக் காற்று பரவுமென்பதற் கையமில்லை. அதே துர்க்கந்த ப்ராணவாயு குறைந்த காற்றில் இன்னும் சில மணி நேரங்கள் ஜனங்கள் அதே நிலையில் உட்கார்ந்திருந்தால் அவர்களுக்கு வியாதி உண்டாகும் என்பது திண்ணம். ஆகவே அறிவாளிகள் இப்போது என்ன செய்யவேண்டும் ? அங்குள்ள துர்க்கந்தக் காற்றை நீக்கி நல்ல சுத்தமான காற்றை அவ்விடத்தில் பரவச்செய்ய வேண்டும். ஆனால் வெளியிலிருந்து காற்று இருக்குமிடத்தை நோக்கி வீசவும் இல்லை. இப்போது எப்படி வெளிக்காற்றை உள்ளே கொண்டு வரமுடியும் ? இதற்கு ஏற்ற சாதனம் யக்ஞம்.

ஓர் இடத்தில் நெருப்புண்டானால் அவ் வுஷ்ணத்தால் பாதிக்கப்பட்ட அவ்விடத்துக் காற்று இலேசாகி வெளியில் செல்லும்; வெளியிலுள்ள பளுவான காற்று உள்ளே நுழையும். மறுபடியது உஷ்ணத்தால் லேசடைந்து வெளிச்செல்ல புதிய காற்று உள்ளே பரவும். இதையாரில்லையென்று உலகில் மறுக்க முடியும் ? ஆகவே யக்ஞத்தால் முதலில் அமர்ந்திருக்குமிடத்தில் புதிய சுத்தமான காற்றை பரவச்செய்கிறோம்.

உலகிலுள்ள எந்தப் பொருளும் உண்மையில் அழிவதில்லை. உள்ள பொருள் அழியாது, இல்லாத பொருள் உண்டாகாது. ஆனால் நெருப்பில் ஓர் கட்டையை இடுவதால் அது எரிந்து அழிந்து விடுகிறதே ? இல்லை. கட்டை அழிந்து விடவில்லை. கட்டையென்பது சில பூதியங்களின் கூட்டுப் பொருள். நெருப்பு என்னும் ஓர் பூதியம் அதில்சென்ற உடன் அக்கட்டையின் கூட்டு பூதியங்கள் பல பிரிவாகப் பிரிய ஆரம்பிக்கின்றன. சில பூதியங்கள் சூக்ஷ்ம அணுக்களாகி ஆகாயத்தில் பரவுகின்றன, சில பூதியங்கள் கூட்டடைந்து

சாம்பலாக மாறுகின்றன. இதை சம்ஸ்கிருதத்தில் பரிணாமம் என்பர். மறுபடி இப்பிரிவுள்ள பூதியங்கள் கூடுமானால் மறுபடி கட்டைவடிவ மடைவதில் சந்தேகமில்லை. ஆனால் பூதியங்களின் கட்டை பிரிப்பதற்குத்தான் நெருப்பு சகாயமளிக்கிறதே தவிர அவ்வாறு பிரிவுற்ற சூக்ஷ்ம, ஸ்தூல, பூதியங்களை மறுபடியும் ஒன்றாகக் கூட்டி பழைய ரூபத்துடன் செய்ய எது உதவியளிக்கு மென்பதை நாம்—தற்கால ரசாயன சாஸ்திரிகளும்—அறியவில்லை. இச் சித்தாந்தத்தைக் கொண்டுதான் நாம் யக்ஞத்தால் நெய்யாதிவாசனை திரவியங்களை யிடுகிறோம். நாம் அதில் இடும்பொருள்கள் நெருப்பின் சகாயத்தால் சூக்ஷ்ம அணுக்களாக மாறி ஆகாயத்தில் பரவுகிறது. அதை அப்படியே காற்றின் மூலமாக உட்கொள்ளும் மனிதர்கள் மிகுந்த சுகத்தைப் பெறுகிறார்கள். ஏனென்றால் நெருப்பிலிட்டபோது பொருள்களின் அசுத்தத் தன்மைகள் ஜட பூதியங்களாக சாம்பல் என்ற பெயருடன் கீழே நின்றுவிட சுத்தத்தன்மையுடைய பொருள்களே அணுக்களாகி பரவுகின்றன. ஆகாயத்தில் பரவிய அணுக்கள் காற்றின் வேகத்தால் வெகுதூரம் வரையில் இழுத்துச்செல்லப் படுகிறது. எவ்வளவு தூரம்வரை அவ்வணுக்கள் பரவுகின்றனவோ அவ்வளவு தூரம்வரை வசிக்கும் மனிதர்களும் அதனால் சுகம் பெறுகிறார்கள் என்பதற் கென்ன சந்தேகம்? இதைவிட மனிதன் பரோபகாரம் என்ன செய்யமுடியும்? இது மாத்திரமா? சுத்த அணுக்களை யேற்றிச்சென்றவாயு கனமடைந்து நீர் நிலைகளில் சேரும்போது அதிலிருக்கும் சுத்த அணுக்கள் நீரிலும் பரவி நீரையும் சுத்தம் செய்கின்றன. எவ்வளவு அருமையான சகாயம் பாருங்கள் பெரியோர்களே!

ஊதுவத்தி கொளுத்திவைத்தல் ஹவனமல்லவா? கொசுக்களை விரட்டுவதற்காக தற்போது சில மூலிகைகளின் கூட்டுப்பொருளாக ஒன்று கடையில் விற்கப்படுகிறது. அதை கொளுத்தி வைத்தபோது அவ்வாசனையைத் தாங்கமாட்டாமல் கொசுக்கள் ஓடிவிடுகின்றன. இதுவும் ஹவனமன்றி மற்றியாது? மார்சளி முதலிய வியாதிகளுக்குப் புகை போடுவதை நீங்கள் கண்டதில்லையா? இது யக்ஞமல்லவா? வியாதியிலிருந்து நீங்கியவர்கள் முதலில் ஸ்நானம் செய்தபோது சீதளம் சேராதிருப்பதற்காக சில பொருள்களை நெருப்பிலிட்டு அவர்கள் முகத்தில் படும்படிச் செய்வதில்லையா? இது யக்ஞமல்லவா?

ஹவனம் செய்யும்போது வேதமந்திரங்களைச் சொல்வது ஏன்?

முன்சொன்ன விஷயங்கள் எல்லாம் நாம் எதிலிருந்து அறிகிறோம்? வேதமந்திரங்களிலிருந்தே. ஆகையால் ஹவனம் செய்யும்போது அவைகளின்



பலன்களை விளக்கிக்காட்டும் மந்திரங்களை நாம் மறவாதிருக்கவும், புதியவர்கள் நம் சபைக்கு வந்தபோது அவர்கள் அறிந்து கொள்ளவும் உதவியாக நாம் சொல்கின்றோம்.

“ நன்றி மறத்தல் நன்றன்று ”

ஆகவே மக்கள்மேல் பெருங்கருணைகொண்டு இவ்வளவு சகாயத்திற்காக வென்று நெருப்பை யுண்டாக்கியளித்த பரமனை, அவனால் அளிக்கப்பட்ட பொருளை உபயோகித்துக் கொள்ளும்போது நினைத்து வணங்குதல் நியாயமல்லவா? ராமன் என்றும் மாம்பழம் சாப்பிட்டறியாத கிருஷ்ணனுக்கு 10 மாம்பழங்கள் வெகுமதியாக அளித்தான். அதை சாப்பிடும் போது கிருஷ்ணன் தனக்கு அதை உதவிய ராமனைப்புகழ, பாராட்ட, வந்தனம் செய்யவேண்டாமா? இன்றேல் அவன் நன்றி மறந்தவனாகமாட்டானா? இதைப்போல் ஹவனம் செய்யும்போது அதன் தாத்பர்யங்களை விளக்கும் மந்திரங்களுடன் இவ்வளவு சகாயத்தை நமக்காக அளித்த பரமனை நன்றி கூறும் முறையில் கடவுளைத் துதிக்கவும் சில மந்திரங்களைச் சொல்கிறோம். கிருஷ்ணன் மாம்பழம் அருந்தும்போது ராமனை நினைத்தல் மாம்பழத்தை ராமனாக நினைத்தல் ஆகாது. அதேபோல் ஹவன காலத்தில் பரமனைத் துதித்தல் ஹவனத்தையே பரமனாகத் துதித்தல் ஆகாது. ஹவனம் புரிய உதவியளித்த கடவுளையே துதிக்கிறோம்.

அக்கினி என்ற பதம் வேதங்களில் இரண்டு பொருள்களில் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றன. கிரியா முறைகளில் பிரயோகிக்கப்படும்போது அதன் பொருள் நெருப்பு. ஞான முறைகளில் பிரயோகிக்கப்படும்பொது அதன் பொருள் கடவுள். ஆகையால் மந்திரங்களில் அக்கினியென்று வந்தவுடனேயே இது நெருப்புதான் என்று அர்த்தம் செய்துவிடலாகாது. உதாரணமாக:—

தஸ்யாஸ்தே ப்ருதிவீ தேவயஜனி ப்ருஷ்டே அக்னி மன்னாத மன்னாத்யாயாயதே. (யஜு—3-5).

இவ்விடத்தில் வரும் அக்னியென்ற பதத்திற்கு—நெருப்பு என்றர்த்தம்.

**(பொருள்)** தேவயாகத்தில் (ஆகாயத்தை சுத்தம் செய்யும் வேள்வியில்) நல்லாகாரங்களை ஆகாயத்தில் பரவச் செய்வதற்காக நான் பூமிமீது நெருப்பை வளர்த்துகிறேன்.

**அக்னே நய சுபதா ராயே அஸ்மான் விஸ்வானி தேவ வயுனானி வித்வான் ||**

(பொருள்) எல்லா சராசரங்களின் ஒளிக் கர்த்தாவாகிய, பூர்ண ஞான ஸ்வரூபனான (அக்னே) சுயம் ப்ரகாச பரமனே ! எங்களை நன் மார்க்கத்திலே நடத்து.

கோவிலில் சென்று, அங்கு இருட்டறையில் வைத்திருக்கும் காதில்லா கேட்காத, கண்ணில்லா பார்க்காத, வாயில்லா உண்ணாத, புலனில்லா ஒன்றும் செய்யாத கல்லுருவத்திற்குத் தலை வணங்கி, சிரசில் குட்டி, தோப்புக்காணங் கள் போட்டு, ஏழைகள் வயறெரிய பாற்பொங்கலாதிகளால் அதற்கு வேடிக் கைக்காட்டி பணவிரயம் செய்யும் விக்ரஹ ஆராதனைக்காரர்களுக்குச் சமமாக, வேதக்கட்டளையை யனுசரித்து வேள்விகள் மூலம் பரோபகாரியம் புரியும் ஆரியசமாஜிகளை ஒப்பிடுவது அறியாமையல்லவா ?

ஆரியசமாஜம் இம்மியளவும் விக்ரஹ ஆராதனை செய்யாத சபை. ஹவனம் ஒருக்காலமும் விக்ரஹ வழிபாடல்ல. சத்ய நெறிப் பரோபகாரமாகும்.

**விக்ரஹ ஆராதனை ஒழிக ! உலகெங்கும் வேள்விகள் பொழிக !!**

## 4. ஸ்வாமி சிரத்தானந்தர், ஸ்வாமி தயானந்தர்களின் நாட்களைக் கொண்டாடுவது சிரார்த்தமல்லவா ?

தற்கால இந்துமதத்தில் சிரார்த்தம் என்பது எப்படி கொண்டாடப்படு கின்றது ? இறந்துவிட்ட ஒருவனின் புத்திரன் மறு வருஷத்தில் தன் தகப்பன் இறந்த அதே தினத்தில் ஓர் பார்ப்பனரை யழைத்துவந்து சில தட்சிணையாதி களை யளிக்கின்றான். அப் பார்ப்பனன் ஏதோ சில சமஸ்கிருத மொழிகளைச் சொல்லி பிண்டம் என்ற ஒன்றை தயார்செய்து இறந்துவிட்டவன் பெயரைச் சொல்லிஓர் பக்கத்தில் வைக்கிறான். இதேபோல் எள்ளை தண்ணீரில் சில சமஸ்கிருத மொழிகளைச்சொல்லி கலந்துவிடுகிறான். தீர்ந்தது, ஸ்ரார்த்தம். இப்போது அப்பையன் இறந்து மேல் உலகத்தில் எங்கோ வசித்திருக்கும் தன் தகப்பனுருக்குத் தான் அளித்த பிண்டம் போய் சேர்ந்திருக்கு மென்றும், அதையருந்தி அவர் பசியாறி இருப்பாரென்றும் தீர்மானித்துக்கொள்கிறான். ஆனால் அப்பிண்டமும், எள்ளும் இங்கேயே பூமியில் நின்றிருப்பதை எல்லோ ரும் காண்கின்றனர். வந்த பார்ப்பனருக்கு அவனின் தகப்பனார் மேல் உலகத் தில் எந்த விலாசத்தில் இருக்கிறார் என்றும் தெரியாது. இந்துமத சித்தாந்த படி இறந்துவிட்டவன் மறுபிறவி யெடுத்து எங்காவது வளர்ந்துகொண்டிருக் கலாம். இவர் பெயரைச்சொல்லி இங்கு பிண்ட மளிப்பதில் என்ன அர்த்த மிருக்கிறது? ஆரியசமாஜம் தினக்கொண்டாட்டங்களில் இப்படிச்செய்வ தில்லை,



ஆங்கிலத்தில் " வீரர்தொழுகை " என்று ஒன்று உண்டு. அதாவது இவ் வுலகத்திலிருந்தபோது எண்ணற்ற வீர பரோபகார காரியங்களைப் புரிந் திருந்து இறந்துவிட்ட ஒருவரின் தினத்தில் பலர் ஒன்றுகூடி அவரின் சாமர்த் தியங்களைப் புகழ்ந்து அவரைப்போல் தாங்களும் வீரகாரியங்களைப் புரிய இடம் செய்துகொள்வது.

இதேபோல் தான் ஆரியசமாஜம் ஸ்வாமி தயானந்த, சிரத்தானந்தர்களின் தினங்களைக் கொண்டாடுவது. என்றால் அந்நாளில் அப்பெரியார்களின் சித் தாந்தங்களை யனுசரித்துவரும் பலர் ஒன்றுகூடி அவர்கள் செய்த தியாக, வீர, ப்ரதாப காரியங்களை நினைவுகூர்ந்து தாங்கள் அதுவரை அவர்களின் சித்தாந்தங் களை யெவ்வளவுவரை பின்பற்றி யிருக்கிறார்கள், இன்னும் எதையெதை பின் பற்றவேண்டும் என்பவைகளை ஆலோசித்து மேலும் மேலும் தங்களை சீர்திருத் திக்கொண்டு செல்கின்றனர். ஆதலால் தினக்கொண்டாட்டம் சிராத்த மல்ல.

## 5. இல்லறத்திலும் பிரம்மசர்யம் அனுஷ்டிக்கவேண்டுமா ?

இல்லறம் என்பது ஆண் பெண்கள் ஒன்றுகூடி வாழ்தல் ஆகும். இல்லறம் என்ற தருமம் எதற்காக ஏற்பட்டது ? கேவலம் மக்கட் பேற்றுக்காகவே. எந்த ஆண் பெண்கள் இல்லறத்தைப் போக இச்சா நிவர்த்தியின் பொருட் டென்று நினைக்கின்றனரோ அவர்கள் வியபசாரர்கள் என்று சாஸ்திரங்கள் சொல்கின்றன. ருதுக்களின் தன்மையை அறியாதவன் மனிதனல்ல. இல்லற தர்மம் ப்ரம்மசர்ய தர்மத்திற்கு விரோதமானதல்ல, ஆனால் ஒத்திருப்பது.

இல்லறத்திலிருந்தும் இருது தர்மங்களை யனுசரித்து தன் வீர்யத்தை நன்கு காப்பாற்றி, கேவலம் மக்கட் பேற்றுக்காக மாத்திரம் போகம் புரிந்து வரும் இல்லறத்தார்கள் உண்மையில் ப்ரம்மசாரிகளே. மனிதர்கள் பிறவிப் பயனை அடைய வேண்டுமென்றால் அவர்கள் வீர்யத்தைக் காப்பாற்ற வேண் டும்.

தற்காலம் உலகத்தின் எல்லா பாகங்களிலும் கர்ப்பத்தடை பிரசாரம் மும் முரமாக நடந்துகொண்டு வருகிறது. பலவித சாதனங்களையும் இதற்காக கண்டுபிடித்துக் கொண்டுவருகின்றனர். ஆனால் பழங்கால ஆரியர்கள் இதை முன்பே கண்டுபிடித்திருக்கின்றனர். ஆனால் தற்காலத்திய சாதனங்களை யவர்கள் கையாண்டார்களில்லை, ஏனென்றால் தற்காலத்திய சாதனங்கள்

கர்ப்பத்தை மாத்திரம் தடைசெய்கின்றனவே யன்றி வீர்யத்தைத் தடைசெய்வதில்லை. ஆனால் ஆரியர்கள் கண்ட சாதனம் வீர்யத்தையே தடைசெய்து மனிதபலத்தை அதிகரிக்கச் செய்கிறது. அச்சாதனம் ப்ரம்மசர்யமே.

இல்லறத்திலும் ப்ரம்மசர்ய மனுசரிப்பதால் வ்யபசாரத்வம் அதிகரிக்காதா? யென்று சிலர் கேட்கின்றனர். இல்லை, இல்லறத்தவர்களுக்கு ப்ரம்மசர்யத்தின் பெருமைகளையும், வீர்ய சம்ரக்ஷணத்தால் நேரும் பெரும் லாபங்களையும், அவர்களின் கடமைகளையும் உணர்த்திவந்தால் ஒருக்காலும் வியபசாரித்வம் ஏற்படாது. ஆனால் வீர்யத்தைக் காப்பாற்றாமல் வீணாக்குவதே வியபசாரத்வமாகும்.

ஆகையால் எல்லா இல்லற தர்மிகளும் ப்ரம்மசர்யத்தை மக்கட் பேற்றை விரும்பும் சமயம்தவிர மற்றெல்லாக் காலங்களிலும் அனுசரித்தேயாக வேண்டும்.

## 6. சாந்தியைப்பெற உண்மையான வழியென்ன ?

ஆங்கிலத்தில் "கிழக்கு கிழக்குதான் மேற்கு மேற்குதான், இவ்விரண்டும் ஒன்றுதல் கடினம்" என்றொரு பழமொழியுண்டு. இது உண்மைதான். மேலும், கிழக்கும் மேற்கும் சேருவது கடினம், ஆனால் கிழக்கின் சித்தாந்தங்களும், மேற்கின் சித்தாந்தங்களும் சேரல் மிகக்கடினம். ஏனென்றால் மேல்நாடுகளில் மனிதர்களுக்கு முக்யமானது பொருளைச்சேர்த்து உலக இன்பங்களை கூடுமானவரை நுகர்தலேயாகும். ஆனால் கீழ்நாடுகளில் தியாகம், தர்மம், துறவறம், தபஸ், ப்ரம்ம விசாரணை முதலியவைகளே மிக முக்யம். ஆகையால் இவ்விரண்டு முக்யங்களும் ஒன்றுசேரல் மிக மிகக்கடினம். சேரவும் சேராது. இவ்விரண்டில் சாந்தி எதில் இருக்கிறது என்பதைப்பார்ப்போம்.

ஓர் ஏழை முதலில் கொஞ்சம் பணத்தை விரும்புகிறான். அவனுக்கது கிடைத்தபோது அத்துடன் அமைதி யேற்படுவதில்லை. மேலும் கொஞ்சம் பணம் வேண்டுமென்று விரும்புகிறான். அதுவும் கைகூடினபோது இன்னும் கொஞ்சத்தை நாடுகிறான். இவ்வாறு மேலும்மேலும் செல்வத்தைநாடிச் சென்று கொண்டே யிருப்பானே யன்றி போதும் என்ற அளவில் அவன் ஒருபோதும் திருப்தி யடைவதில்லை.

ஓர் வாலிபன் மணம் செய்துகொண்டால் அமைதியா யிருக்கலாமென்று நினைக்கிறான். மணம் ஆனபின் ஓர் குழந்தை பெற்றுவிட்டால் திருப்தியா



யிருக்கலாமென யெண்ணுகிறான். குழந்தையும் பிறந்தபின் அதற்கு ஓர் மணம் செய்துவிட்டால் தான் அமைதி யடையலாமென நினைக்கிறான். அதுவும் நிறைவேறினால் அதன் வயிற்றில் ஓர் குழந்தை பிறப்பதைக் கண்டுவிட்டால் தன் மனம் அமைதியாகுமென்கிறான். அதுவும் முடிந்தது. ஆனால் அமைதி யுண்டாகவில்லை. இன்னும் மேலும்மேலும் பல விருப்பங்கள் தோன்றிக் கொண்டே யிருக்கின்றன. அமைதி யடைந்த பாடில்லை.

இவ்வாறு மனிதர்கள் விஷய சுகங்களில் அமைதி யடையாது மேலும் விரும்பிக்கொண்டே செல்கின்றனர். காரணம் உண்மையில் போகிக்கப்படும் இன்பம் அப்போகப் பொருள்களில் இருந்தால் அமைதியை உண்டாக்க முடியும். போகங்கள் பொருள்களில் இல்லை. அதை போகிப்பவர்களின் உள்ளத்திலேயே இருக்கின்றன. இதனாலேயே பர்த்ருஹரியென்பார்,

போகா ந புக்தா வயமேவ புக்தாஸ்
தபோ ந தப்தம் வயமேவ தப்தா: |
காலோ ந யாதோ வயமேவ யாதாஸ்
த்ருஷ்ணா ந ஜீர்ணா வயமேவ ஜீர்ணா: || என்றார்.

(பொ—ள்) போகங்கள் நம்மை போகிக்கவில்லை, நாமே அவைகளை போகிக்கிறோம். துன்பங்கள் முடிவடைவதில்லை, நாமே முடிவடைகிறோம். காலம் செல்வதில்லை, நாமே செல்கிறோம், ஆசைகள் ஜீர்ணமாவதில்லை, நாமே ஜீர்ணமாகிறோம்.

இவைகளிலிருந்து நாம் என்ன அறிகிறோம்? அமைதி உலக இன்பங்களை நுகருவதால் உண்டாகாது. அவைகளை விலக்கித்தள்ளுவதாலேயே உண்டாகும். புலன்களை உலக இன்பங்களை நுகரவிட்டு அமைதியை அடைய முயற்சிப்பது எரியும் நெருப்பில் நெய்யைவிட்டு அணைக்க முயற்சிப்பது போலத்தான். ஆகையால் சர்வசங்க பரித்யாகமே சாந்தியைப் பெறும் மார்க்கமாகும்.

எல்லோரும் உலகை வெறுத்துத் தள்ளினால் உலகம் என்னாவது? என்கின்றனர் சிலர். இங்கே தியாகம் என்பது காரியங்களைப் புரியாமல் இருப்பது அல்ல. காரியங்களைப் புரியவே வேண்டும். ஆனால் அதன் பலனாக ஏற்படும் இன்ப துன்பங்களில் ஆழ்ந்துவிடக்கூடாது. கீதையில் இதையே நிஷ்காம்ய கர்மம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எக்காரியம் செய்யினும் அதைத்தன் கடமையாக எண்ணிச் செய்யவேண்டுமன்றி பிரதிபலனை நாடிச்செய்யலாகாது. தர்மமார்க்கத்தில் செல்லும்போது நிஷ்காம்யமாகச் செல்வதால் எவ்வளவு

பெரிய ஆபத்துக்கள் வரினும் நம்மை ஒன்றும் செய்யாது. ஸ்வாமி தயானந்தர் இதை வெகு அழகாக கீழ்வரும் மந்திரத்தால் விளக்கிச்சொல்கிறார் :—

நிந்தந்து நீதிநிபுணா யதிவா ஸ்துவந்து
லக்ஷ்மீ: ஸமாவிசது கச்சது வா யதேஷ்டம் ।
அத்யைவ வா மரணமஸ்து யுகாந்தரேவா
ந்யாயாத் பத: ப்ரவிசலந்தி பதம் ந தீரா: ॥

(பொ—ள்) நீதியில் வல்லோர், தன்னை நிந்தித்தாலும் புகழ்ந்தாலும்; செல்வம் வந்தடையினும், இருப்பது போய்விடினும்; இன்றே மரணம் நேருவதாயினும் பல நாட்கழித்து நேருவதாயினும்; நியாய மார்க்கத்திலேயிருந்து அறிவாளிகள் ஒரு அடியும் வேறு மார்க்கத்தில் வைக்கார்கள்.

இதுவே நிஷ்காம்யகர்ம லக்ஷணம். நியாய மார்க்கத்தில் செல்லும் போது அது கடமையென அறிந்து செல்லவேண்டும்.

ஆகையால் விருப்பற்று காரியங்களைப் புரிவதாலேயே உண்மையான சாந்தியைப்பெற முடியும்.

---

# இந்து வேதம்

[ஆசிரியர் ஸ்ரீ. வே. சண்முகம் பிள்ளை, லங்கை.]

---

(ஆசிரியர் குறிப்பு:—நம் இந்து தர்மம் சிலோன், மோரிஷியஸ், தென்னாப்பிரிகா முதலிய தேசங்களில் மிகவும் ஆதரிக்கப்படுகிறது. உலகத்தின் எல்லா பாகங்களில் வசிக்கும் தமிழன்பர்களும் நம் பத்திரிகைக்கு விஷயதானம் புரியுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வேண்டுகோளுக்கிணங்கி இவ்வியாசம் சிலோனிலிருக்கும் ஓர் சகோதரரால் எழுதியனுப்பப்பட்டது. இதிலிருந்து நம் சகோதரர் ஜாதி கட்டுப்பாட்டை ஒழிப்பதில் எவ்வளவு தீவிரமாயிருக்கிறார் என்று விளங்குகிறது. இதை தமிழன்பர்கள் அனைவரும் அறிந்து தங்களுக்குள்ளிருக்கும் ஜாதிப் பேயை அறவே ஒழிக்கமுற்படுவார்களாக.)

“இந்து வேதம்” இதுவே அநாதியாயுள்ளது. இதனையே ஆதி இந்துக்களும் சாதி இந்துக்களும் அநுஷ்டித்து வந்தனர்; ஆதி இந்து, சாதி இந்து என்பன போன்ற வித்தியாசங்கள் நமது வேதார்த மதமாகிய இந்து மதத்திலில்லை. பின்னர் அக் காலத்திலிருந்த மக்கள் அவரவர்



வசிப்பிடங்களுக்குரிய நிலம், தொழில் முதலியனபற்றி யெழுந்த சாதிக்கட்டுப்பாட்டை சமூகக்கட்டுப் பாட்டுள் நுழைத்தனர். எல்லாச் சமூகத்தார்க்கு மேற்க அக் காலத்தில் மனுஸ்மிருதி முதலிய பொது நூல்கள் எழுதப்பட்டன. அந் நூல்களில் விதிக்கப்பட்டபடி செய்வதை அக்காலத்திலுள்ள சகல சமூகத்தார்களும் மனமொப்பி யேற்றுக்கொண்டதோடு அவற்றைப் பொன்னே போற் போற்றியும் வந்தனர்.

பின்னர் சாதி இந்துக்களுளிருந்த சில விஷமிகள் தங்கள் சமூகம் மாத்திரம் மேலோங்க வேண்டுமென்ற எண்ணத்தினால் சகலருக்கும் பொதுவாக இருந்த இந்து மதத்தைத் தமதாக்கியதோடு, அம்மதத்தில் முன்னெக்காலுமில்லாத சில புதுவிதிகளையு மெழுதி மனுஸ்மிருதி முதலிய நீதி நூல்களிலும் ஏனைய சாஸ்திரங்களிலும் புகுத்திப் பாமரமக்களை ஏமாற்றி, ஆதியில் கலப்பற்றதாய், மதிப்புள்ளதா யெழுதிய உண்மையான மனுஸ்மிருதிக்குரிய மதிப்பையும் கெடுத்து விட்டார்கள்.

தகாததும் ஒவ்வாததும் ஒரு சமூகத்தை மட்டும் தாழ்த்துவதுமாகிய அநேக சுலோகங்கள் இக்காலத்து மனுஸ்மிருதிகளில் மலிந்துகிடக்கின்றன; இவை யக்காலத்திலெழுதப் பட்ட எட்டுப் பிரதியாகிய பழைய மனுஸ்மிருதியில் கிடையாது; காந்தியடிகளும் அநேகமுறை இதனை வற்புறுத்தியுள்ளார். எச் சாதியார் எச் சமயத்திலிருந்த போதிலும் அவ்வச் சாதி சமயங்களிலிருந்த பழைய காலப் புலவரெல்லாம் “நீதிக்கு மனு” என்றும், “மனுமுதல் நூல்களுங்கூறும்” என்றும் தாங்கள் எழுதும் நூல்களுக்கு ஆதாரமாக மனு முதலிய நீதி நூல்களை எடுத்துக் காட்டியிருக்கின்றனர்; இங்கே அவ்வச் சாதி யென்னும் பதம் தமிழர், சிங்களர், சோனகர், சீனர் என்பனபோன்றவர்களைக் குறிக்குமன்றி ஒரே சமூகத்தில் ஒரே சாதியாரிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களைக் குறித்ததன்று.

செம்பில் ஏற்பட்டிருக்கும் களிம்பை விளக்கிச் சுத்த செம்பைக் கண்டு மகிழ்பவனே போல் சில சாதி இந்துக்களால் இந்து மதத்துக் கேற்பட்ட களிம்புகளைப் புத்த பகவான் துடைத்தெறிந்து தமது பழைய இந்து மதக் கொள்கைகள் இத்தன்மைத்தாகுமென நிலை நாட்டி மகிழ்ந்தார். புத்தர், இந்து சமயத்தை நிலை நாட்டிய போதிலும் புத்தரை வணங்குபவர்கள் அதை இந்து சமயமெனக் கொள்ளாது புத்த சமயமென வேறொரு சமயமாகக் கொள்ளத் தலைப்பட்டனர். இஃதிவ்வாறாகப் புத்த பகவான் நிருவாணத்தையடைந்த சில ஆண்டுகளின் பின்னர் புத்த சமயக் குருமார் சிலரால் சில புது வியாக்கியானங்கள் சேர்க்கப்பட்டதென்றும், அச் சேர்க்கையின் பயனால்

புத்த சமயத்திலும் பின்னர் களிம்பு பற்றியதென்றுங் கூறுவர்; அக்களிம்புகள் வட இந்தியாவில் அக் காலத்திலிருந்த சங்கராச்சாரியராலும் பின்னர் தென்னிந்தியாவிலிருந்த மணிவாசகப் பெருமானாலும் துடைக்கப்பட்டது.

செம்பிலுள்ள களிம்பு யார் துடைத்தாலும் துடைப்படுவதைப் போல் இந்து மதத்திலிருந்த களிம்பையே இவர்களும் துடைத்தனர். இவ்விதம் மற்றுமநேகர் காலத்துக்குக் காலம் தோன்றி அரும் பாடுபட்டு இம்மதத்தை ஆதியிலிருந்தபடி வைத்து விட்டுப் போயினர். இப்போதும் இதைத் துடைப்பாரில்லாததால் களிம்புகள் ஏற்பட்டதாக டாக்டர் அம்பேத்கார் முதலிய ஆதி இந்து தலைவர்களுக்குத் தெரிய வந்தால் தாராளமாக அவர்களும் இதைத் துடைக்கலாம்.

ஆனால் மனுஸ்மிருதி முதலிய நூல்களை நெருப்பிலிடுவதைப் பார்க்கிலும் சகல சமூகத்தார்க்கும் தேவையான பாகங்களையதிலெடுத்துக் கொண்டு, தேவையற்றதும் ஒவ்வாததுமாகிய விஷயங்களை யெல்லாம் திரட்டி நெருப்பி லிடுத லுசிதம். சாதி யென்பது சமூகக்கட்டுப்பாடு; சமூகக்கட்டுப்பாட்டில் தகாதனவற்றை யரசாங்கத்தார் மூலம் தவிர்ப்பிக்கவேண்டும். சாதிக்கட்டுப் பாட்டிற்காக மதம் மாறுதல் புத்திசாலித்தனமாகாது.

இறைவன்முன் மக்களுக்குள் எவ்வித வித்தியாசமும் கிடையாது என்பதற்கு அநேக சான்றுகள் இருக்கின்றன. நந்தனாரின் பக்திப்பெருக்கை யாரே யறியாதார்! நந்தனுக்கு கடவுள் கடாட்சம் உண்டானபோது அவனின் எஜமானராகிய பார்ப்பனர் ஜாதி வித்யாசத்தால் நந்தனை விலக்கினரா! இல்லை, அதற்நுப்பதில் அவனையே தன் குருவாக ஏற்றுக்கொண்டார். கபிலர் சிவவாக்யராதிப் பெரியோர்களும் ஜாதி வித்தியாசம் கிடையாதென்றே பறைசாற்றி யிருந்தனர்.

பறைச்சியாவதேதடா பணத்தியாவதேதடா
இறைச்சிதோலெலும்பிலும் இலக்கமிட்டிருக்குதோ
பறைச்சிபோகம் வேறதோ பணத்திபோகம் வேறதோ

என்றார் ஓர் பெரியார்

சாதியிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதிவழுவாநெறிமுறையின் — மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதா ரிழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ளபடி.

என்றார் ஔவைப்பிராட்டி.

இவ்வாறான மேற்கோள்கள் கணக்கற்றவை கிடைக்கின்றன. ஆதலால் ஜாதியென்ப தொன்றுமில்லை. மனிதரெல்லோரும் மனித ஜாதிதான்.

# ஸ்ரீஸ்வாமி சத்யதேவ ஆசார்யரின்

## அரிய உபதேசம்

### ஹிந்துக்கள் ஏன் துன்பப்படுகிறார்கள்?

---

அரசர்களான இந்துக்கள் தங்கள் குடிகளுக்கு க்ஷத்திரிய (யுத்த) தர்மத்தை போதிப்பதில்லை. அவர்கள் பொதுமக்களிலிருந்து செட்டுத் தன்மையை விலக்கி அவர்களில் யுத்த ஆவியை ஊதியிருப்பார்களானால் இன்று இந்துக்கள் அந்நியர்களிடை ஆடுகளைப்போல் துன்பமடைய மாட்டார்கள். இந்துக்களின் பொய் தயா-தர்மம் அவர்களின் ஜீவிதத்தை கஷ்டமயமாக்கி வைத்திருக்கிறது. ஆனால் இந்துக்களுக்கு போதித்திருக்கவேண்டியது-துஷ்டனுக்கு துஷ்டனாகவும், நல்லவனுக்கு நல்லவனாகவும் இருக்கவேண்டும்; உலகில் எல்லோரும் சாதுக்களாயில்லை. உலகம் பலவான்களுக்காகவே இருக்கிறது, துர்ப்பலர்களுக்கல்ல என்று. ஆனால் இந்துக்களுக்குக் கற்பிக்கப்பட்டதோ—உன்னை யாராவது முன்னால் குத்தினால் நீ அவர்கள் மேல் புஷ்பத்தை யெடுத்துப் போடு; இதனால் உன்னை முன்னால் குத்தியவனுக்கு நரகம் கிடைக்கும், உனக்கு மோக்ஷம் கிடைக்கும்—என்று. இவ்வாறாய அநியாய பாடங்களை இந்து மக்களிடைபோய் சாது சன்யாசிகள் பரப்பிக்கொண்டு வருகின்றனர். இக்காரணத்தாலேயே இந்துக்கள் தற்காலம் பல துன்பங்களுக்குட்பட்டு ஆஹா! யென்று கத்திக்கொண்டிருக்கின்றனர்.

ஆனால் இவ்வாறாக பிறர்செய்யும் குற்றங்களைப் பொறுத்துக் கொள்பவனும் பெரிய குற்றம் புரிந்தவனாகின்றான். துஷ்டத்தனம் புரிபவனை எதிர்க்காமல் ஆதரிப்பதால் அவன் மேலும் மேலும் துஷ்ட காரியங்களையே புரிகின்றான். ஆகையால் துஷ்டனின் துஷ்டச் செய்கையை சகித்துக்கொள்பவன் அவனை மேலும் துஷ்டத்தனத்தில் செலுத்துபவனாகின்றான். ஆகையால் இவனும் கடவுள் முன்னிலையில் பெரிய குற்றவாளிதான். தீங்கு புரிபவன் நரகம் செல்லும்போது அவனின் தீங்கை பொறுத்துக்கொண்டவன் அவனுக்கு முன் நரகத்தை யடைகிறான்.

ஆகையால் இந்துக்கள் க்ஷேமமுற வேண்டுமானால் இனிமேலாவது "துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனம்" என்ற பழமொழியைக் கைக்கொண்டொழுகுவார்களாக.

# உண்மைச் சம்பவக் கதை

## (ஆர்ய வீர்)

## நம்பிக்கைத் துரோகம்.

மிகவும் ஜனநெருக்கம் நிறைந்த சென்னைமா நகரின் சைனாபஜார் தெருவின் வழியாக ஓர் நாள் மாலை ஞானசேகரரும், குணசேகரரும் சென்று கொண்டிருக்கின்றனர். வண்டிகளின் சப்தம் காதைத் துளைத்துக்கொண்டிருக்கின்றது. ஓர் பக்கம் பத்திரிகை விற்போரின் கூச்சல், ஓர் பக்கம் ஜப்பான் சாமான்கள் விற்போரின் "ஒன்றையணா இரண்டரையணா" யெனும் கலிபலி, ஓர்பால் பழமாதி தின்பண்டங்கள் விற்போர்களின் அரவம், ஓர் பால் பசிபால் வாடி வதங்கிய ஏழைப் பிச்சைக்காரர்களின் ஈனக்குரல். இக் காட்சிகளைக்கண்டு அவைகளின் விஷயமாய் ஆழ்ந்து யோசித்துக்கொண்டு சென்று கொண்டிருக்கும் ஞான, குணசேகர்களுக்கெதிரில் சுமார் 7 வயதுடைய ஓர் வாலிபன் முகத்தில் பசிக்களை தாண்டவமாட வந்து "ஐய! இரண்டு நாள் பட்டினி, தயவுசெய்து ஒரு தம்படி கொடுங்களேன்" என்றான். அவனின் முகத்தைக்கூர்ந்து நோக்கிய குணசேகரர் பாம்பைக்கண்ட படை நடுங்குவதைப்போல் நடுக்குற்று தன் ஜேபியிலிருந்து 1 அணாவையெடுத்து அப் பையனுக் களித்தார். இச்செய்கையில் சந்தேகம் கொண்ட ஞானசேகரர் தன் தோழரை நோக்கி "குணசேகரா! ஒரு நாளாயினும் நீ ஒருவருக்கு 1 தம்பிடி தர்ம மளித்ததை நான் கண்டிலேன், நான் தர்ம மளிக்கச் சென்றாலும் அதைத் தடுப்பாய், அப்பேர்ப்பட்ட நீ இப்பையனுக்கு இன்று 1 அணா அளித்த காரணம் என்ன?" என்று வினவினர்.

*          *          *          *

சென்னையில் ஓர்பால் ஓர் பெரிய கட்டடவேலை நடந்துகொண்டிருக்கிறது. அநேக ஆண்களும் பெண்களும் வேலை செய்துகொண்டிருக்கின்றனர். அவர்களுக்குப் பின்புறம் நின்றுகொண்டு அக்கட்டட வேலையைக் கட்டித்தருவதாய் ஒப்புக்கொண்ட எஜமானராகிய சோமேசர் வேலையை கவனித்துக் கொண்டிருக்கிறார். அவரைக் கூர்ந்து பார்ப்போர் அவர் அங்கு வேலை செய்வோரில் யாரையோ கவனித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறார் என்பதை அறியலாகும். திடீரென்று சோமேசர் முகத்தில் புன்னகை தோன்றியது. காரணம் அவர் எதை உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தாரோ அது



இவரைப்பார்க்க நேரிட்டமையாலேயே. சோமேசர் உள்ளம் பல எண்ணங்களை எண்ணலாயிற்று. ஆயினும் தான் கோரிய அவ் வரிஜனப் பெண் மணியுடன் வார்த்தையாட மாத்திரம் தியங்கிக் கொண்டிருந்தார்.

நாட்கள் பல சென்றன. சோமர் தன் விருப்பத்தை நீலவேணியிடம் தெரிவிக்கத் தருந்த சமயம் நேரவில்லை. ஓர் நாள் தன் ஆபீஸ் அறையில் உட்கார்ந்திருந்தபோது ஓர் வேலைக்காரனை யழைத்து நீலவேணியை அழைத்துவரச்சொன்னார். நீலவேணி எதிரில்வந்து நாணத்தால் தலை குனிந்து நின்றாள். 1 ரூபாயை அவள் கையில் அளித்து 1 பெட்டி சிகரெட்டு வாங்கிவரும்படிச் சொன்னார். பெண்மணியும் பெட்டி வாங்கிவந்து அவரிட மளித்துவிட்டு மீதி சில்லரையையும் அளிக்க கையை நீட்டினாள். சோமேசர் "வேண்டாம், அதை நீயே வைத்துக்கொள்" என்றார். பெண் மணி எவ்வளவோ மறுத்தும் சோமேசர் ஒரே பிடிவாதம் செய்ய பெண் மணி அதை யெடுத்துக்கொண்டு வேலைக்குச் சென்றுவிட்டாள்.

பல தினங்களாய் இதே மாதிரியாக அவளுக்குச் சிறிது பணத்தை யளித்துக் கொண்டுவந்த சோமேசர் அதற்கு மேலும் தன் ஆசையை அடக்கி வைக்க முடியாதவராகி வழக்கம்போல் அப்பெண்மணி கடைக்குச் சென்று வந்தபோது "நீலவேணி! உன்னிடம் நான் சில விஷயங்கள் பேசவேண்டும். ஆகையால் இன்று மாலை எல்லா வேலையாட்களும் போய்விட்டபின் என்னை வந்து சந்தி" என்றார். எஜமானின் வார்த்தையை மீறுவதால் தன் வேலைக்குப் பங்கம் நேருமென பயந்த நம் நீலவேணி அன்று மாலை எல்லோரும் வேலையை விட்டுச் சென்றபின் ஓர் நீரோடை யருகிலமர்ந்து வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்த சோமேசரை யணுகி தன் வரவைத் தெரிவித்தாள். துள்ளி யெழுந்த சோமேசர் "பெண் பாவாய்! நான் அநேக நாட்களாய் உன்னைக் கண்டு காதல் கொண்டு வருந்திவருகிறேன். என்றாலும் பொறுக்க முடியாமல் உன்னை இன்றைக்குச் சந்திக்கும்படிச் சொன்னேன். நீ வேறு விதமாக எண்ணாதே. யான் உன்னை மணந்து கொள்ளவே விரும்புகிறேன். என் விருப்பத்தை யீடேற்றுவாயோ?" என்றார். நீலவேணி பயமும் நாணமும் ஒருங்கே கொண்டு நடுநடுங்கி மெல்லிய தழதழத்த குரலில் "எஜமானரே! இதென்ன வேடிக்கை. நானோ இந்து மதத்தின் சாபமான ஹரிஜனக் குடும்பத்தில் பிறந்த ஓர் அபலை. நீரோ பெரிய மேல் ஜாதியில் உதித்த உத்தமர். நீரென்னை எவ்வாறு மணம் புரியக்கூடும்? உம்முடைய ஜாதியார் உம்மைத் தடை செய்யார்களோ? என் தாய், தமையன்மாரும் இதற்கு ஒரு போதும் சம்மதியார்கள். இவ் வபலையை மன்னியுங்கள்"

என்றாள். "பெண்ணே, அந்தக் கவலை யெல்லாம் உனக்கு வேண்டாம். எனக்கு பந்துக்கள் யாரும் கிடையாது. உன் தாய் தமையனுக்கு போதுமான திரவியம் அளிக்கிறேன். இனி என்ன தடை?" என்றார் சோமேசர். "பெரியவரே, ஏதோ காமவசப்பட்ட நீர் இன்று என்னை மணம்புரிந்து கொள்ளலாம். ஆனால் இன்னொருநாள் மேல் ஜாதியைச் சேர்ந்த யாராவதொரு பெண்மணி உம்மை மணம் புரிய முன் வந்தால் அப்போது என்னை கைவிட்டு விடாமல் நீர் என்ன செய்ய முடியும்?" என்று கம்பீரத்துடன் கேட்டாள். "என் குல தெய்வ ஆணையாய் யான் உன்னை யன்றி வேறொருவரையும் மணம் புரியேன், இது சத்தியம்" என்றார் சோமேசர். நீலவேணி மௌனமானாள்.

* * *

ஐதராபாத் தேசத்தில், ஓர் ஊரில், ஓர் பெரிய அரண்மனையில் சோமேசரும் அவரின் காதற்கிழத்தி நீலவேணியும், அவர்களின் அன்புக்கறிகுறியான 3 வருடக் குழந்தை பூபாலனும் விளையாடிக்கொண்டிருக்கின்றனர். நீலவேணியின் முகம் சிறிது வாட்டமடைந்திருக்கிறது. தன் புருடனின் முகத்தைப் பன்முறை நோக்கி நீலவேணி மனதிற்குள் துக்கப்பட்டுக் கொண்டிருக்கிறாள். அன்றுமாலை புருடன் வெளிச் செல்ல அவரின் அத்தியந்த தோழர் கமலசேகரர் உள்ளே நுழைந்தார். அவரை வரவேற்றமரச் செய்த நீலவேணி "அன்புமிக்க ஐயா! என் புருடன் இந்த ஒரு வருட காலமாய் ஒரு நாளாகிலும் இரவில் வீட்டில் தங்குவதில்லை. முன் போல் என்னிடம் அன்பு செலுத்துவதுமில்லை. சில நாள் நான் பட்டினியிருந்தாலும் சாப்பிட்டாயா என்றுகூட கேட்பதில்லை. பூர்ணமாறுதலடைந்திருக்கிறார். இதற்குக் காரணம் உமக்குத் தெரிந்திருக்கும். தயவுசெய்து என் மனப்புண்ணாற அதை ஒளியாமற் சொல்லுங்கள்" என்றாள். கமலசேகரர் மிகுந்த வாட்டமடைந்து "தங்காய்! நின் கணவன் இங்குவந்திருக்கும் ஓர் மகம்மதிய நடனப் பெண்மேல் இச்சைக் கொண்டு சதா அவளிடமே இருந்து வருகிறார். எல்லா சம்பாத்யத்தையும் அவளுக்கே சமர்ப்பித்து வருகிறார். இதுவே அவர் உன்பால் வெறுப்பு கொண்டிருப்பதற்குக் காரணம்." என்றார். "அன்புமிக்க தந்தையீர்! தயை கூர்ந்து இவ்வுண்மையை யான் ப்ரத்யக்ஷமாக அறிய நீர் உதவி செய்ய வேண்டும். இந்நன்றியை யான் என்றும் மறவேன்." என, கமலசேகரரும் ஒப்புக்கொண்டார்.

மாலை 7 மணிக்கு சோமேசர் தன் புதிய காதலியான மகம்மதிய நடனப் பெண்ணின் வீட்டில் அவளுடன் ஒரே கட்டிலிலமர்ந்து தாம்பூலம் தரித்துக்



கொண்டிருக்கிறார். காமப்பேய் வசப்பட்ட அவர் சிறிது தூரத்தில், தன்னால் மணம் செய்யப்பட்ட தன் மனைவி நீலவேணி நின்று தன்னைப் பார்த்துக் கொண்டிருப்பதைக் காணவில்லை. அன்றிரவெல்லாம் அம் மகமதியப்பெண் வசம் லீலைகள் புரிந்துகொண்டிருந்து காலை தன் வீடு சென்றார். வீட்டில் ஒருவரையும் காணவில்லை. வீடெங்கும் தேடினார். பன்முறை உரத்த குரலிட்டுக் கூப்பிட்டார், பதிலில்லை. பிறகு வெளியில்வந்து விசாரித்தபோது நீலவேணி தன் மகனுடன் முன்தினம் இரவு இரயிலேறி எங்கோ சென்றுவிட்டதாகத் தெரியவந்தது. உண்மையை உணர்ந்தார், வருந்தினார், அவளைத் தேடிக் கண்டு பிடிக்கப் பல முயற்சிகள் செய்தார், எல்லாம் வீணாயிற்று. இனிமேல் தன் மனைவியைக் காணமுடியாதெனத் தீர்மானித்துத் தன் போக்கை மாற்றிக்கொண்டார்.

"ஞானசேகரா! சோமேசரால் கைவிடப்பட்ட அத்துர்ப்பாக்யவதியான நீலவேணியின் புத்திரன் பூபாலனைப்போல் காணப்பட்டமையால்தான் அப் பிச்சைக்காரப் பையனுக்கு ஒரு அணா அளித்தேன்" என்றார் குணசேகரர். "இவ் வரலாறெல்லாம் உனக்கெப்படித் தெரியும், நீ எப்போது அப் பையனைப் பார்த்தாய்?" என்றார் ஞானசேகரர். "நண்ப! நீலவேணியை அநியாயப் படுகுழியில் ஆழ்த்திய அத் துஷ்ட சோமேசன் இதோ உன்னுடன் நிற்கும் குணசேகரனாகிய நான் தான்" எனலும் திடுக்குற்ற ஞானசேகரர் மறுபடி அப் பிச்சைக்காரப் பையனிருக்குமிடம் சென்று ஒரு காலணாவை அவன் கையிலீந்து கேட்க அவன் தன் பெயர் பூபாலனென்றும், தன் அன்னை சுமார் மூன்று மாதங்களுக்குமுன் பரலோகம் சென்றுவிட்டாளென்றும், தன் தகப்பனார் யாரென்றும், எங்கிருக்கிறாரென்றும் தெரியாதென்றும் கூறினான். ஞான, குணசேகரர்கள் இருவரும் கற் சிலையைப்போல் நின்றுவிட்டனர்.

நற்காரியங்களுக்கு, தேச முன்னேற்றத்திற்கு ஜாதி பேதம் கிடையாதென்று சீர்திருத்தவாதிகள் சொல்லும்போது "ஐயையோ! ஜாதி எப்படியில்லாமற் போய்விடும். மேல் ஜாதி மேல் ஜாதிதான், கீழ் ஜாதி கீழ் ஜாதிதான்" என்று கத்தும் கடையர்கள் பிற பெண்களின் கற்பை யழிக்க மாத்திரம் அவ் ஜாதியை மறந்து விடுகின்றனர். என்ன கொடுமை, என்ன கல் நெஞ்சம், என்ன பசப்பு வார்த்தைகள்! ஜாதியைக் கட்டிக்கொண்டு அழும் சுய நலமிகள் இவ்வாறான தீய காரியங்களுக்கு அது உதவி புரிவதாலேயே அதைவிட முடியாது என்கின்றனரோ என்னமோ நாமறியோம்!

இவ் வுண்மைச் சம்பவத்தால் கலப்பு மணத்தால் ஒருவித தீங்கும் நேரா தென்பதையும் நாமறிகிறேரும். ஜாதி விட்டு ஜாதி மணம் செய்துகொள்வதால் குழந்தைகள் பிறக்காமற் போகாதென்பதற்கும் இது ஒரு சான்ருகும்.

துஷ்டர்களால்.வஞ்சிக்கப்பட்டு அநாதைகளாக விடப்படும் பூபாலனைப் போன்ற குழந்தைகள் இந்துமதத்தில் அநேகம் இருக்கின்றன. இவர்களைக் காப்பாற்ற இந்துமதம் என்ன முறையைக் கையாளப்போகின்றது என்பதை நாம் அறிய விரும்புகிறேரும். நமக்கென்ன என்று பேசாமல் இருந்துவிட்டால் இவர்களையெல்லாம் அந்நிய மதத்தினர் வெகு சந்தோஷமாகத் தங்களுடன் சேர்த்துக்கொள்ளத் தயாராயிருக்கின்றனர். இதனுல் இந்துமதத்தின் பலம் குறைந்துகொண்டே வருகிறதென்பதை அறியும் பெரியோர்கள் இம் மாதிரி விஷயங்களுக்காக எவ்வித நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்போகிருர்கள் என்பதையும் நாமறிய விரும்புகிறேரும்.

கடவுள் அநாத ரக்ஷகன். அவனின் அருளைப்பெற விரும்புவோரும் அநாத ரக்ஷகர்களாக ஆகவேண்டும். இந்துமதம் அநாதைகளை ரக்ஷிக்கும் சேவை புரிந்து கடவுளருளுக்குப் பாத்திரமாகுக.

---

# ஆரிய உலகம்.

சுமார் மூன்றுவருடங்களுக்கு முன்பாக அமெரிக்காவில் "சர்வ மத மஹாநாடு" ஒன்று கூடியது. அதற்கு உலகத்தின் எல்லா பாகங்களிலிருந்தும் எல்லா மதப்பெரியோர்களும் சென்றிருந்தனர். அது சமயம் பாரத நாட்டிலிருந்து வைதிக தர்மத்தை அங்கு விளக்கிச் சொல்வதற்காகவென்று அயோத்யாப்ரசாத் என்பவரை சார்வதேசிக் சபை அனுப்பிவைத்தது. மஹாநாட்டில் வைதிகசூர்ய ஒளிக்கு முன் மற்றெல்லா ஒளிகளும் இருண்டுவிட்டன. ஆகையால் அமெரிக்க வாசிகள் அவ் வைதிகச் சூர்யனின் ஒளியைத் தங்கள் நாட்டில் நன்கு பரவச்செய்ய வேண்டுமென்று சார்வதேசச் சபையைக் கேட்டுக்கொண்டதன் பேரில் அயோத்யாப்ரசாதை அங்கேயே சில காலம் தங்கியிருந்து வேலை செய்யும்படி கேட்டுக்கொண்டனர். கொஞ்சம்கொஞ்சமாக சத்தியவித்தாந்தங்கள் அமெரிக்கவாசிகளின் உள்ளங்களிலே பரவலாயிற்று.ஒரு பிரசாரகர் போதாத நிலைக்கு ஜனத்தொகை பெருகலாயிற்று. மறுபடி



சத்யாசரண் என்பார் அங்கு செல்ல நேரிட்டது. தற்சமயம் அவ்விரண்டு தேஜஸ்களும் போதாமல் மற்றிரண்டு வைதிக சூர்யர்கள் சென்றிருக்கின்றனர். பாஸ்கராநந்த் தீரகாத்ஜீ, சித்தாந்தாலங்கார். "டச் கயாளு"வுக்கும்; எம். ஏ. எல். எல். பி. "பிரிடிஷ்கயாளு"வுக்கும் சென்றிருக்கின்றனர். இன்னும் இவ்வாறு எத்தனை ஞானகர்த்தர்கள் அங்கு தேவையாயிருக்குமோ யாரறிவார்?

அஜ்மீர் ஆர்ய சமாஜத்தின் சார்பாக இம்மாதம் அங்கு ஓர் பெரிய கலப்பு பந்தி போஜனம் நடைபெறப்போகிறது. இந்திய நாட்டின் எல்லா ஜாதி மக்களும் சிறு வேற்றுமையுமின்றி அதில் கலந்து கொள்ள வருகிறார்கள். இதற்கு ஆரிய சமாஜத்தார் டாக்டர் அம்பேத்காரையும் அழைத்திருக்கின்றனர். ஏனென்றால் அவருக்கு ஆரிய சமாஜம் அறவே ஜாதி பாகுபாட்டை ஒழித்துவிட்ட சபை என்பதைக் காண்பிக்கும் பொருட்டேயாகும்.

இந்தியாவிலே ஆரிய சமாஜத்தைத் தழைத்தோங்கிச் செய்த தேசங்களில் பஞ்சாப் தேசமே மிக முக்யமானதாகும். இதே பஞ்ஜாப் தேசந்தான் பண்டிட். குருதத்த எம். ஏ; பண்டிட். லேக்ராம்; ஸ்வாமி சிரத்தானந்தர்; மஹாசய ராஜ்பால்; இன்னும் லாலா லஜ்பதிராய்; பாய் பரமானந்தர் முதலிய பெரியார்களைப் பெற்றளித்ததாகும். இவ்வெல்லோரும் சுத்த ஆரியர்களாகி ஒன்றல்லது பல வழிகளிலே ஆரிய சமாஜ முன்னேற்றத்திற்காக உழைத்தவர்களாகும். அங்கு டிசம்பர் மாதத்திலே அர்த்த சதாப்தி கொண்டாடப் போகின்றனர்.

ஸ்வாமி சிரத்தானந்தரால் ஸ்தாபிக்கப்பட்ட காங்கரிகுருகுலம் தன் 37வது வருட சதாப்தி விழாவை கொண்டாடப் போகின்றது. அது சமயம் புதிதாக மாணவர்களையும் வேண்டியவரை சேர்த்துக்கொள்ளும். ஆகையால் குருகுலத்திற்குத் தங்கள் பிள்ளைகளை யனுப்பிவைக்க விரும்பும் பெற்றோர்கள் உடனேயே ஆரிய சமாஜ அதிகாரிகளுக்கு விண்ணப்பம் செய்து கொள்ளவேண்டும். பிள்ளைகள் 7 வயது முதல் 8, 9 வயதிற்குட்பட்டவர்களாக இருக்கவேண்டும். மற்ற விவரங்களை ஆரிய சமாஜத்திற்கெழுதி தெரிந்து கொள்ளலாம்.

---

# தென்னமெரிக்காவில் ஆரிய சமாஜப் பிரசார வேகம்.

சுமார் மூன்று வருடங்களுக்கு முன் அமெரிக்காவின் தலை நகரமாகிய சிகாகோவில் உலக மத மஹா நாடு ஒன்று நடைபெற்றது. அதற்கு உலகின் எல்லா மத சித்தாந்தப் பெரியோர்களும் சென்றிருந்தனர். பாரத நாட்டிலிருந்து அயோத்யாப்ரசாத் யெனும் அறிஞரும் வேத ஒளியைப் பரப்பும் பொருட்டு அங்கு சென்றிருந்தனர். வேதப் பிரகாசத்தின் முன் மற்றெப் பிரகாசமும் ப்ரகாசிக்காமற் போனமையால் மற்ற பிரகாசகர்கள் வேதப் பிரகாசகரை சில மாதங்கள் தங்களுடனேயே தங்கியிருந்து வேதப் பிரகாசத்தை தங்களுக்கு ப்ரகாசிப்பிக்கச் செய்து கொண்டிருக்குமாறு வேண்டினர். வேண்டுகோள் ஒப்புக்கொள்ளப்பட்டது. சில மாதங்களுக்குள் அமெரிக்காவில் கணக்கற்ற யிடங்களில் வேதப்பிரகாசம் ப்ரகாசிக்கத்துடங்கின. அதற்குச் சாட்சியாக கணக்கற்ற ஆரிய சமாஜங்கள் தோன்றின. நானாவட்டத்தில் ஓர் பிரகாசகரால் எங்கும் சென்று பிரகாசத்தை ப்ரகாசிக்கச்செய்ய முடியாமற் போய் விட்டதால் துணைக்கு மற்றோர் பிரகாசகரை வேண்டினர். பாரத நாட்டிலிருந்து சத்யாசரணர் எம். ஏ. எனும் மற்றோர் பிரகாசகர் அமெரிக்கா சென்றார். துறைமுகத்தை கப்பல் அடைவதற்கு முன்பே ஊரில் வைபவம், அன்றையதினம் மாத்திரம் அமெரிக்க நகர் இந்திர நகரை யொத்து விளங்கின. இந்திரனைப் போன்ற அமெரிக்க கவர்னரும் வேதப்பிரகாசரான சத்யாசரண பிரம்மத்தை எதிர்கொண்டழைத்தார். இந்திர விழாவைப் போல ஊர்வலம் நடந்தது. இதற்குமேலும் வர்ணித்துச் சொல்ல எம்மாலாகாது. ஆகையால் இதுவரை அவ்விந்திர நகர் வர்ணனையை நிறுத்தி, அப்பிரகாசகரிடமிருந்து நமக்குக் கிடைத்துள்ள ஓர் கடிதத்தின் சாராம்சத்தைக் கீழே வரைவோம் :—

மூன்று மாதங்கள் டச்கயானாவில் தங்கியிருந்தபின் 10ந் தேதி அக்டோபர் மாதம் சத்யாசரணர் ட்ரினிதாத்திற்குத் திரும்பி வந்தார். இவரை யேற்றுக் கொண்டு செல்லும் Orange Nassan யெனும் கப்பல் மார்க்கத்தில் ஜார்ஜ் டவுன் யெனுமிடத்தில் நின்று செல்லும் என்பதை ஜார்ஜ் டவுன் வாசிகள் அறி



யலாயினர். அவ்வாறே கப்பலும் நின்றது. 12 மணி வரை அங்கே தங்கியிருந்து தான் செல்லும் என்பதை கப்பலதிகாரிகள் வாயிலாக அறிந்த அவ்வூர்வாசிகளின் உள்ளத் தெழுந்த உணர்வை நாம் உணர முடியாது. முதலில் 'டேலி க்ரானிகல்' பத்திரிகை நிருபர் சத்யாசரணரைக் கண்டு பேசினார். அவர் சத்யாசரணரை இத்தாலி அபிசீனியா யுத்தத்தைக் குறித்து வினவியபோது சொன்னதாவது: "தங்களின் சுய நலக்காரியத்திற்குத் தொண்டு, மேன்மை யென்ற பெயர்களையிடுவது "சாம்ராஜ்யவாத"த்தின் ஓர் பெரிய குற்றமாகும். முசோலினி நூற்றாண்டுகளாக ஓர் ஸ்வதந்த்ர ராஜ்யத்தை சீர்திருத்தப் போவதாகச் சொல்லிக்கொண்டு தன் அபிலாஷையை முடித்துக்கொள்ள முயற்சிக்கிறார். அவரின் உள்ளத்தில் பழங்கால ரோமன் ஜாதியின் உன்னதி உதயமாயிருக்கிறது. ஆனால் அவ்வுன்னதி உலக மக்களின் கண்களை மறைத்துவிட முடியாது. 2000 வருட பரம்பரையைக் காப்பாற்றிய, 6ம் நூற்றாண்டிலிருந்து கிருஸ்தவ தர்மத்தை கடைப்பிடித்து வந்த, சக்கரவர்த்திகளில் மேலானவர் என்ற பெருமை கொண்டு வந்த, அரேபியாவிலிருந்து ஓடி வந்த மகம்மதியர்களுக்குத் துணிந்து ஆதரவளித்த ஓர் ஜாதி இப்போது சரியாக-உன்னதியாக-இல்லையா? முசோலினி மனிதத்தன்மையற்ற காரியத்தை ஆரம்பித்துள்ளார். ஐரோப்பிய தேசம் இதன் பலனை அனுபவித்தே தீரும். பாரத நாட்டின் உதவி அபிசீனியாவுக்கே யாகும். இதன் காரணம் வர்ணத்தின் பக்ஷபாதமல்ல, ஆனால் தங்களின் சுவதந்திரங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் ஐரோப்பியர்களின் வீரத்தாலாகும். காந்தியார் பாரதப் பிரதிநிதியாக தன் மனோபாவத்தை வெளியிட்டிருக்கிறார். அவர் வெறும் வார்த்தையில் அல்ல, தனத்தால்கூட அபிசீனியாவுக்கு சகாயம் செய்கிறார்."

இவ்விஷயம் 8ந்தேதி அக்டோபர் மாதம் 'டேலிக்ரானிகல்' பத்திரிகையில் "Indian scholar on Italo-Euthopian crisis" என்ற தலைப்பின் கீழ் வெளியிடப்பட்டது. இதனால் அவ்வூர் வாசிகள் முக்யமாக நீக்ரோக்கள் மிக சந்தோஷத்தை யடைந்தனர்.

8ந்தேதி மாலை பாரதீய ஒற்றுமை என்ற விஷயத்தைக்குறித்து பிரசங்கம் செய்தார். ஆர்யசமாஜ மூலசித்தாந்தங்களை விளக்கிச்சொன்னார். இரவு 11 மணிவரை துறை முகத்தில் நின்றிருந்தபின் கப்பலில் ஏறினார். கப்பலும் நகர்ந்தது. ஆஹா! அப்போது அங்கு கூடியிருந்த திரளான ஜனங்களனைவரும் தங்கள் தலைப்பாகைகளை யெடுத்து நமஸ்தே புரிந்த காட்சியை யாரே வர்ணிக்கக்கூடும்!

*மற்றோர் கடிதத்தில் காணப்படுவதாவது :—*

*சத்யாசரணர் இங்கு தங்கியிருந்தவரை எல்லோரின் உள்ளங்களும் ப்ரசன்னசாகரத்தில் மூழ்கியிருந்தது. ஆனால் அப்பிரம்ம ஸ்வரூபம் தங்களைவிட்டுப் பிரிந்து செல்லப்போகின்ற தென்றறிந்தவுடன் அப்பிரசன்னக் கடல் வற்றி விட்டது. துக்க உஷ்ணத்தால் ஜனங்கள் தவிக்கலாயினர். ஊருக்குள் ஒரு குழந்தையுமின்றி சூன்ய மானதைப்போன்ற பாவனையுடன் எல்லோரும் துறைமுகத்தை நாடிச்சென்றனர். ஏன் இவ்வளவு ஆர்ப்பாட்டம்! சத்யாசரணரின் ஆக்ருதியும் சத்யப்ரகாசத்தைப் பெற்றிருந்தாமையால் அன்பு மூர்த்தியாக விளங்கியிருந்தார். கப்பல் புறப்பட்டவுடன் எல்லோரின் தலைப்பாகைகளும் கழண்டன. கப்பலும் பார்வைக்கு மறைந்தது. எல்லோரும் துக்க சாகரத்தில் மூழ்கினர். அவ்வூர் வாசிகள் சத்யா சரணரால் தங்களுக்குச் செய்யப்பட்ட நன்றியை மறவாமல் மந்திரம்போல் ஜெபித்துக் கொண்டிருக்கின்றனர். அவர் இங்கு தங்கியிருந்த சில தினங்களுக்குள் 84 அங்கத்தினர்களை ஆரிய சமாஜத்தில் சேர்த்தார். சமாஜத்திற்காக சொந்தக்கட்டடம் கட்டுவதற்காகவென்று 2200 கில்டர் (3575 ரூபாய்கள்) சேகரிக்கப்பட்டன. பூமியும் விலைக்கு வாங்கியாகிவிட்டது. சுத்தம் செய்யப்பட்டுவருகிறது. அநேகமாக அக்டோபர் 27ந்தேதி பகவான் தயானந்தரின் நிர்வாண உத்சவத்தின் போது சமாஜம் திறந்துவைக்கப் படுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.*

*இவ்வாறே உலகமெங்கும் சத்ய சித்தாந்தமாம் வேதப்ரகாசம் பரவுமாக. மனித சமூகம் மறுபடியும் சத்தியத்தில் திடங்கொண்டொளிர்க. பிரமன் அருள்மாரி பொழிவாராக.*

**ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:**

---

பு226

# ஹிந்துக்களும்
## உருவ வழிபாட்டுக் கொடுமையும்

*அநியாயம்! அர்த்தமற்ற செய்கை!! தங்கள் சொந்த தர்மத்தை அப்படியே 100க்கு 100 பங்கு அனுசரித்து வரும் சிலரை தீண்டத்தகாதவர்களென்று பிரித்து வைத்துக் கொண்ட ஹிந்துக்கள் சிறிதும் வெட்கமின்றி தங்களுக்கு மாறுபட்ட தர்மத்தினராகிய முகம்மதியப் பண்டாரங்களின் சமாதிகளை பூஜிக்கின்றனர். படித்த மகம்மதியப் பெரியார்கள்கூட இவ்வாறு செய்வது பயனற்றது என்று சொல்கிறார்கள். ஆனால் ஹிந்துக்களிற் சிலர் அதையும் கவனியாது அவைகளை வணங்குகின்றனர். இது புத்திக்குறைவல்லவா?*

*கான்பூர் தேசத்தில், கங்கை நதிக்கரையில் பகவதிகட்ட மந்திரம் என்ற கோவில் ஒன்று இருக்கிறது, அதில் ஆங்கிலப் பெண் புருடர்களின் விக்கிரகங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. நூற்றுக் கணக்கான ஹிந்துக்கள் தினமும் சென்று பூஜிக்கின்றனர். இங்கு ஆங்கிலேயர்களின் உருவங்கள் எப்படி ஸ்தாபிக்கப்பட்டன என்பதைப் பார்ப்போம் :—*

*1857ம் வருடத்தில் நடந்த சிப்பாய் கலகத்தில் ஆங்கிலேயர்கள் தங்கள் உயிரை காப்பாற்றிக்கொள்வதற்காக ஆகாரம் சமைப்பதின் பொருட்டு அநேக கோவில்களை இடிக்க நேரிட்டது. இச்செய்கை கேப்டன் ஸ்டுவர்ட் என்பவருக்கு சிறிதும் பிடிக்கவில்லை. ஆகையால் அவர் இவ்வாறு செய்பவர்களைத் தடுத்து வந்தார். இவர் கான்பூரில் ஓர் பேக்டரியில் சரிபார்த்துக் கொண்டிருந்தார். இதன் மத்தியில் அனேகர் இவர்பால் அன்பு காட்டினர். பகவத்தாஸ் எனுமொருவர் இவர்பால் அன்பு கொண்டு அதன் அறிகுறியாக ஓர் கோவிலைக் கட்டி அதில் மற்ற தேவி தேவர்களுடன் கர்னல் ஸ்டுவர்ட்டையும் ஸ்தாபித்தார். அதைத்தான் இப்போது இந்துக்கள் பூஜிக்கின்றனர். இதற்குப் பின் அதே கோவிலில் ஜனரல் ஹேவ்லக், ஜனரல் நாயத்ன, ஒரு (ஆங்கில) டாக்டர், அவரின் மனைவி ஆகியவர்களின் மூர்த்திகளும் ஸ்தாபிக்கப்பட்டன.*

*இம்மூர்த்திகளை கணக்கற்ற ஹிந்துக்கள் கங்கா ஸ்னானம் செய்து பூஜித்துக் க்ருதார்த்தர்களானதாக நினைத்து வருகின்றனர்.*

*ஆனால் இக் கோவிலில் ஹரிஜனங்கள் என்று சொல்லப்படுவோர் பூஜை செய்ய வந்த போது அங்கிருந்த பிராம்மணர்கள் தடிகளால் அவர்களை அடித்து விரட்டினர். இதுதான் இந்து தர்மத்தின் பெரிய கருணை! உயிரற்ற, இறந்த இருதயம் படைத்த, ஜடபுத்தி ஹிந்து பக்தர்கள் வேண்டுவதெல்லாம் கோவிலில் ஏதாவதொரு மூர்த்தியிருக்க வேண்டியதே. ஆனால் தாங்கள் எதை எதற்காக பூஜிக்கிறோம் என்ற ஆராய்ச்சி அவர்களுக்கு என்னவும் தேவையில்லை.*

*அந்தோ! இவ்வாராய்ச்சியற்ற தன்மை எப்போது தான் ஹிந்துக்களை விட்டொழியுமோ!*

---

## மெட்ரோபாலிடன் அபிவிருத்தி

| | | |
|---|---|---|
| முதல் வருஷ விடுத்த பாலிஸிகள் | ரூ. | 40,00,000 |
| இரண்டாவது | ,, | 42,50,000 |
| மூன்றாவது | ,, | 44,50,000 |
| நான்காவது | ,, | 69,00,000 |

### லாப பங்கு (போனஸ்)

ஆயிரத்திற்கு ஒரு வருஷத்திற்கு

| | | |
|---|---|---|
| முழு ஆயுள் பாலிஸிகள் .... | ரூ. | 15-0-0 |
| எண்டோமெண்ட் பாலிஸிகள் .... | ,, | 11-0-0 |

## மெட்ரோபாலிடன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.,

28 போலக் தெரு, கல்கத்தா.

விபரங்களுக்கு :—

கே. டி. ராஜன்,
ஆர்கனைஸர்,
புதுக்கோட்டை.

G. C. S. லிங்கம்,
கிளை காரியதரிசி,
3, எர்ரபாலு செட்டி தெரு, மதராஸ்.



THE CHEAPEST AND BIGGEST HOUSE FOR :—
☞ WHOLESALE AND RETAIL DEALINGS.

## KASHMEER SPECIAL PULAV RICE

USE ALWAYS

Register No. 2439.

*Specially For* :—**MARRIAGES, DINNERS, and HOTELS.**

## MANGAL PROVISION STORES.

PROP: **PHOOLCHAND BHIKALAL,**

**GHEE, PULAV RICE, SUGAR, FLOUR, WHEAT, and GENERAL MERCHANTS.**

***2/138 Audiappa Naicken St., G.T. Madras.***

**BEWARE OF IMITATIONS.** Please note that each of our Pulav Rice Paper Bags and Gunny Bags bearing our Regd. No. 2439. with " Cresent and Flag " Trad Mark, and our Kashmeer Special Pulav Rice are available everywhere.

***A TRIAL WILL CONVINCE YOU.***

புதிய சரக்கு! மேலான ரகம்!!

காஷ்மீர் ஸ்பெஷல் பொலவ் அரிசியை எப்போதும் உபயோகியுங்கள். ஒவ்வொரு காகித உறைகளின்மீதும் சாக்குப்பைகளின் மீதும் எங்கள் "சந்திரப்பிறை கொடி" மார்க்கும் ரிஜிஸ்டர் நெ. 2439 இருப்பதை கவனித்து வாங்கவேண்டுகிறோம். ஒரு தடவை உபயோகிக்க உண்மை விளங்கும். உத்தரவாதமுள்ளது

# சுதேசி மாளிகை

சுத்த சுதேசி பட்டு, நூல்
ஜவுளி ரகங்களுக்கும்
சகலவிதமான, சுதேசி
சாமான்களுக்கும் பெயர்
: பெற்ற இடம் :

நம்பிக்கைக்கும்
நாணயத்துக்கும்
உத்திரவாதம்.

## : ஜெனரல் சுதேசிஸ் :

.... லிமிடெட் ....

368, எஸ்பிளனேட் :: சென்னை.

Printed at the Hindu Prachar Press, 193, High Road, Triplicane, Madras.
Edited and Published by E. S. Rangaswami, "Hindu Dharma" Office,
170, China Bazaar Road, Madras.